



# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –379



## ஜனாதிபதி இல்லம் முற்றுகையும் சிங்களவர் மத்தியில் வெடித்த போராட்டமும்

## அரசியல் அமைப்பு,பயங்கரவாத தடைச்சட்டம்,காணிவிடுவிப்பு தொடர்பில் அரசுக்கு நிபந்தனை விதித்த தமிழரசுக்கட்சி

## கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோரின் இன்றைய நிலை

# ஜனாதிபதி இல்லம் முற்றுகையும் சிங்களவர் மத்தியில் வெடித்த போராட்டமும்

கொவிட் பரவலின் பின்னரான இலங்கையின் பொருளாதாரம் கடுமையான பாதிப்பினை எதிர்கொண்டிருக்கிறது. என்றுமில்லாவாறு நாட்டின் உற்பத்தி, ஏற்றுமதிக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தமை, வெளிநாடுகளில் தொழிலுக்குச் சென்றவர்கள் நாட்டுக்கு திரும்பியமை போன்ற பல காரணங்கள் அந்நிய செலாவணியின் இருப்புக்கும் பாதிப்பினை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக ரஷ்ய - உக்ரைன் மோதலும் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இன்று இலங்கையின் டொலர் ஒன்றிற்கான விலை 300 ரூபாவினை எட்டியிருக்கிறது. என்றுமில்லாதவாறு சடுதியான அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மக்களை பாதித்துள்ளது. கொவிட் பரவல் நிலைமையின் பின்னர் வேலையின்மைப் பிரச்சினை தலைதூக்கியிருந்த நிலையில், ஓரளவுக்கு மக்கள் மீண்டும் தமது அன்றாடப் பணிகளை முன்னெடுத்து வந்த சூழ்நிலையில், பொருட்களுக்கான விலையேற்றமும் தட்டுப்பாடும் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செய்வதறியாது சர்வதேச நாடுகளிடம் கடன்களைப் பெற்றே நாட்டின் அனைத்துத் துறைகளையும் இயக்கவேண்டிய இக்கட்டான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. அரசின் வெளிநாட்டு உள்நாட்டுக் கொள்கைகளும் செயற்பாடுகளும் இலங்கையின் இன்றைய திடீர் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள். கடந்த அரசுகளின் காலத்திலிருந்து இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி நோக்கிப் பயணித்திருந்திருந்தாலும், இன்றைய அரசின் வருகின்றனர். இதனால் தொழிலுக்குச் செல்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். உரிய நேரங்களில் உரிய இடங்களுக்குச் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. பொதுப்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஏராளமான வாகனங்களும் உரிமையாளர்களும் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தேவையான எரிபொருள் இலங்கை மின்சார சபைக்குக் கிடைக்காமலேயே இன்று நாட்டில் 10 மணி நேரங்களுக்கும் அதிகமாக மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இதனால் மின்சாரத்தை நம்பி வேலை செய்வோரும் இன்று பாதிக்கப்பட்டுள்ளனர். அரிசி, மா, பால்மா, மருந்துப்பொருட்கள் என அனைத்துப் பொருட்களும் விலையேற்றம் கண்டுள்ளது. இப்பொருட்களுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது. இன்னும் இவற்றின் விலைகள்



வெளியிட ஆரம்பித்துள்ளனர். தெற்கின் பௌத்த தேரர்கள் சிலர் இன்று பொதுவெளிக்கு வந்துள்ளனர். நாட்டின் பிரதான எதிர்க்கட்சி நாட்டில் பாரிய போராட்டங்களை செய்துள்ளது. அனுரகுமார திசாநாயக்க தலைமையிலானக் கட்சியினர் மக்களை ஒன்றுதிரட்டி ஜனாதிபதி மற்றும் பிரதமர், நிதியமைச்சர் ஆகியோரை பதவி விலகுமாறு கோஷங்களை எழுப்பி பாரிய ஆர்ப்பாட்டங்களைச் செய்துள்ளனர். ஒரு அரசுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்து போராட்டங்களைச் செய்கின்ற போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம். இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் போராட்டம் நாடு முழுவதும் அரசுக்கு எதிராக உக்கிரமடைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. கொழும்பில் இடம்பெற்ற ஜனாதிபதியின் இல்ல தரப்பினர் நாட்டினைக் கொண்டு நடத்த முடியாத சூழலுக்கு இன்று வந்துள்ளனர். குடும்ப ஆட்சி தலைதூக்கி இலங்கையின் இன்றைய அரசியலிலும் நாட்டின் பொருளாதாரத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலங்களை விட இன்று இலங்கையின் கடன் சுமை பல மடங்காக அதிகரித்துள்ளது. அரசின் செயற்பாடுகளால் இந்த நாட்டின் மக்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த அரசின் செயற்பாடும் பொருளாதார நெருக்கடியும் மக்களை வேறு பாதைநோக்கி அழைத்துச்செல்கிறது. மாற்று அரசாங்கம் குறித்துப் பேச்சுக்கள் இடம்பெறுகிறது. மக்கள் பட்டினிச் சாவினை நோக்கி நகரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை எழுந்துள்ளது. இன்று நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்டவர்களின் வீடுகளுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெற்கு செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டின் தொடர் விலையேற்றங்கள் மக்களைப் பாதிக்கும். இதே நிலையில் நாட்டினை வழிநடத்திச்செல்ல முடியாது. மக்கள் அதற்குத் தயாராக இல்லை என்பதையே இன்றைய மக்களது போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றது. இதனை இன்றைய ஆட்சியாளர் நன்கு உணர்ந்திருப்பார். நாட்டு மக்களுக்குத் தேவையான விடயங்களைச் செய்ய உடனடியாக இன்றைய அரசு தயாராக வேண்டும். விலைக்குறைப்பு, அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைத்தல் போன்றவை உடனடியாக உறுதிசெய்யப்பட வேண்டும். மக்கள் தமது வாழ்க்கையினை சுமுகமாக நடத்திச்செல்வதற்கான ஏதுநிலைகள் ஒரு ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டும். மக்கள் போராட்டங்கள் வலுப்பெற்றால் சர்வதேச உள்ளூர் ரீதியாக இலங்கை செயற்பாடுகள் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. தலைகீழாக மாறியுள்ளது. தெற்கு அரசியலில் உட்கட்சிப் பிரச்சினை வலுத்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட்ட பங்காளிக் கட்சிகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது இன்றைய அரசு. இன்று இக்கட்சிகளுக்குள் பிரச்சினைகள் முளைத்துள்ளது. நிறைவேற்று அதிகாரத்தினைப் பயன்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய முன்னெடுத்த சில நடவடிக்கைகள் பெரும் அரசியல் நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளது. கொவிட் ஒழிப்புக்காக நியமிக்கப்பட்ட செயலணி தொடர்பில் கடும் வாதப் பிரதிவாதங்கள் பாராளுமன்றில் நடைபெற்றது. இன்றைய அரசின் செயற்பாடுகள் தொடர்பில், நியமனங்கள் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் நாடு முழுவதும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. உதய கம்மன் பில, விமல் வீரவன்ச, சுசில் பிரேமஜயந்த, வாசுதேவ நாணயக்கார போன்ற அமைச்சர்களும், பல இராஜாங்க அமைச்சர்களும் இன்றைய அரசில் அங்கம் வகிக்கவில்லை. இவர்களை ஜனாதிபதி பதவி நீக்கியதுடன், சிலர் தாமாகவே பதவியில் இருந்து இராஜினாமாவும் செய்துள்ளனர். சுதந்திரக் கட்சி அரசின் செயற்பாடுகளை நேரடியாகவே விமர்சித்து வருகின்றது.

இன்று இந்தியா, சீனாவிடம் இலங்கை பில்லியன் கணக்கில் கடன்களை வாங்கிக் குவித்து வருவதுடன், இலங்கையின் சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு தாரைவார்க்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் நாடப்பட்டுள்ளது. இதனைவிட இன்றும் பல நாடுகளிடம் கடன் உதவியினைக் கோரியுள்ளது இலங்கை. இன்று நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்காக மணிக்கணக்கில் நாட்கணக்கில் வீதிகளில் மழை வெயில் பாராது வரிசையில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் இன்றும் நீண்ட வரிசை தொடர்கின்றது. பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடியாமல் மக்கள் தவித்து அதிகரிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. இதனால் ஊதியமாகப் பெறும் பணம் போதாமல் அல்லல்படும் நிலைக்கு மக்கள் வந்துள்ளனர். இந்த உச்சக்கட்ட விலையேற்றங்களை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாமல் இன்று போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இவ்வரசிற்கு எதிராக நாடு முழுவதும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றது. தெற்கில் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற சூழலில், மக்கள் தாமாகவே முன்வந்து ஜனாதிபதியின் மீரிஹான இல்லத்திற்கு செல்லும் வழியினை மறித்து பாரிய ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பில் மேற்கொண்ட சம்பவம் தெற்கில் மாத்திரமல்ல இலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களுக்கு, முஸ்லீம் மக்களுக்கு இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் ஒன்றும் புதிதல்ல என்றபோதிலும் தெற்கில் அதுவும் சிங்கள மக்களால் ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக நீண்டகாலத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டமாக இது பார்க்கப்படுகின்றது. ஆரம்பத்தில் சிறிய அளவிலான மக்கள் எண்ணிக்கை இவ்வார்ப்பாட்டத்தினைச் செய்தபோதிலும் பின்னர் ஏராளமான இளைஞர் யுவதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது.

பொருளாதார நெருக்கடிக்கான தீர்வினை வழங்குமாறும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை வீட்டிற்கு செல்லுமாறும் வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. பெருமளவில் பாதுகாப்புப் படையினர் அங்கு குவிக்கப்பட்டிருந்த நிலையில், பெரும்பான்மை சிங்கள மக்களால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள், இன்று தனது ஆட்சியினைக் கொண்டு நடத்துவதில் பெரும் நெருக்கடியினைச் சந்தித்துள்ளார். பதவிக்கு வந்து இரு வருடங்களிலேயே அவரை வீட்டிற்கு செல்லுமாறு மக்கள் கோஷமிடுகின்றனர். இன மத மொழியினைக் கடந்து ஒட்டுமொத்த நாடும் இவ்வரசாங்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரை சகல துறைகளிலும் நியமித்து, உயர் பதவிகளை வழங்கிய கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் ஓரங்கட்டும் நிலை வந்துள்ளது. பௌத்த பீடங்கள் ஜனாதிபதியின், இவ்வரசின் செயற்பாடுகள் குறித்து கருத்துக்களை முற்றுகை ஆர்ப்பாட்டத்தின் போது சில மனித உரிமை மீறல் சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன. கல்வீச்சு, தடியடி, கண்ணீர் புகை, தண்ணீர் பிரயோகம், வாகன எரிப்பு போன்றவற்றின் பின்னால் பலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சையும் பெற்றிருக்கின்றனர். இதன் போது 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, நுகேகொட ஜுபிலி தூண் பகுதிக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினருக்கு இடையில் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் குழுவொன்று வன்முறைச் சூழலை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. இரும்பு ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளுடன் ஆயுதம் ஏந்திய குழுவினர், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தூண்டிவிட்டு, மீரிஹான பங்கிரிவத்தையில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று கலவரத்தை ஏற்படுத்தியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்முறையில் ஈடுபட்டவர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டில் அரபு வசந்தத்தை உருவாக்குவோம் என கோஷமிட்டு போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கலவரக்காரர்கள் திட்டமிட்ட வகையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தியுள்ளமை கைது செய்யப்பட்ட நபர்கள் மூலம் தெரியவந்துள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான இலங்கையின் நெருக்கடிச் சூழலில் மக்களது போராட்டங்கள் வலுப்பெறுகிறபோது நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நாட்டின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பெரும் பாதிப்பினை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். அரசாங்கம் இதேபோக்கில் பயணித்தால் எதிர்காலத்தில் அரசியல் ரீதியான மாற்றங்களையும் நாடு எதிர்கொள்ளவேண்டிய சூழல் ஏற்படலாம். இன்று மூவின மக்களையும் உசுப்பேற்றி அதில் குளிர்காய அரசு முனைந்துள்ளது. சர்வதேச ரீதியாகக் கடன்களைப் பெற்று நாட்டின் உயர் பதவிகளை வகிப்போர் உல்லாசமாக வாழ்க்கையினை அனுபவிக்க, குடிமக்கள் துன்பப்படுகின்றனர். உர இறக்குமதித் தடையால் நாட்டின் விவசாயத் துறையினர் பெரும் இன்னல்களைச் சந்தித்துள்ளனர். பெருந்தோட்டத் தொழிற்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று அரசி வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. இன்று இலங்கையின் ஆடைத் தொழிற்சாலைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மின்சாரத் தடையால், இறக்குமதிப் பிரச்சினை நாட்டில் தலையெடுத்துள்ளதால் உற்பத்திகளும் பாதிக்கப்பட்டு ஏற்றுமதியும் வீழ்ச்சியடைந்துள்ளது. டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசு திண்டாடி வருகின்றது. நாட்டின் எதிர்க்கட்சிகளும் மக்களைத் திரட்டி அரசுக்கெதிரானப் போராட்டங்களை முன்னெடுக்கின்றன. நெருக்கடிச் சூழலில் மக்களது போராட்டங்கள் தவிர்க்க முடியாதவை. அதேவேளையில் மக்கள் ஜனநாயக ரீதியாகப் போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது அரசுக்கெதிரான தரப்பினர் என்ற போர்வையில் நாசகாரக் கும்பல்களும் மக்களோடு மக்களாக களமிறங்கலாம் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மக்கள் இந்த விடயங்களில் மிக அவதானமாக இருக்கவேண்டும். அரசு உடனடியாக நாட்டின் இன்றைய நிலைமைக்கு சுமுகமான முறையில் தீர்வுகளை வழங்க உரிய நடவடிக்கைகளை எடுத்தேயாக வேண்டிய நிலையில் இருக்கிறது. மக்களது போராட்டங்கள் வலுப்பெறுகின்ற போது இதனது விளைவுகள் மிகவும் ஆபத்தானதாக மாற்றம் பெறும் என்பது தொடர்பிலும் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதுவே இன்றைய யதார்த்தம்.

**சசிகரன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## பேச்சுவார்த்தையும் வாக்குறுதியும் நடைமுறைப்படுத்தப்படுமா?

இந்த நாட்டில் தமிழினம் வாக்குறுதிகளை நம்பி வெற்றி பெற்றதாக சரித்திரம் இல்லை. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டதும், குழப்பியடிக்கப்பட்டதும், ஒப்பந்தங்கள் அனைத்தும் கிழித்து எறியப்பட்டதும் தான் வரலாறாகப் பதிவாகியிருக்க, மீண்டும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசுவதற்கான அனுமதியினைக் கேட்டு நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் இலங்கையின் இன்றைய இக்கட்டான பொருளாதார நெருக்கடிச் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து பேசியிருக்கின்றார் ஜனாதிபதி. இந்தச் சந்திப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ புறக்கணித்திருந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையில், வடக்கில் ஜனநாயகத்திற்கு எதிரான காணி விவகாரங்கள் உடனடியாக நிறுத்தப்படும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது. மாவட்டங்களை பிரதேசங்களை கடல் எல்லைகளை மாற்றுவது இடம்பெறாது. தொல்லியல் வனவிலங்குகள் காடுகள் தொடர்பான சிறப்புச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தப்படும். வடமாகாண மக்களின் அபிவிருத்திக்கான விசேட நிதியம் குறித்தும் ஆராயப்பட்டது. காணாமல்போனவர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பமாகி பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு நீதி வழங்கப்படும். நீண்டகாலமாக பயிர் செய்கையில் ஈடுபட்ட மக்கள் தொடர்ந்தும் பயிர் செய்யலாம், மீனவர்கள் தொடர்ந்தும் மீன்பிடியில் ஈடுபடலாம்.எங்கு வாழ்வாதாரம் இடம்பெறுகின்றதோ அது தொடரும். வலிந்து காணாமலாக்கப்பட்டோரை பொறுத்தவரை, அவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் வழங்குவது என்ற முடிவு இழப்பீடு இல்லை. மாறாக குடும்பத்தினருக்கு தற்காலிக நிவாரணம் என ஜனாதிபதி அங்கு தெரிவித்ததாகவும், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பிலும் அங்கு பேசப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இவை அனைத்தும் நீண்ட காலமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் நாட்டின் பாதுகாப்புச் செயலாளராக பதவியில் இருந்த தற்போதைய ஜனாதிபதிக்கு இந்த விடயங்கள் ஒன்றும் தெரியாதவையல்ல. இவ்வாறான பேச்சுவார்த்தையொன்றில் நம்பி மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொண்ட விடயம், ஏனைய வடக்குத் தமிழ்க் கட்சிகளால் பேசுபொருளாக மாறியுள்ளது.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் அரசியலில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ள நிலையில், ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைக்கப் போராடிவரும் அரச தரப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா? இதற்கு பௌத்த நிகழ்ச்சி நிரல், தெற்கு அரசியல் துணைநிற்குமா? என்கிற கேள்விகள் சாதாரணமாக எழுகின்றது. தமிழினம் கடுமையாக எதிர்க்கும், சர்வதேச உள்ளூர் ரீதியாக குற்றவாளிகள் என அடையாளப்படுத்தியிருக்கும் தரப்புடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட பேச்சுவார்த்தை இன்று தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பினர் மீது வெறுப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. அன்று மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பின்னாலிருந்த கோட்டாபய ராஜபக்ஷ, இன்று நாட்டின் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருக்கின்ற இந்தச் சூழலில், இனப்பிரச்சினைக்கானத் தீர்வு எட்டப்பட்டு, எதிர்காலத்தில் இலங்கையை அபிவிருத்திப் பாதை நோக்கிக் கொண்டுசெல்வதற்கு இந்தப் பேச்சுவார்த்தை பாலமாக அமையுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

184

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



இவ்வெட்டைப் பிரதேசங்கள் நெடுகிலும் இயந்திரச் சுடுகலன் கொண்டுசெல்லப்பட்டு, அங்கே தோன்றுகின்ற சகல ஜீவராசிகள் மீதும் சூடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. தம்மவர்கள் இதனைத் தெரிந்து கொண்டிருப்பதனால், அவர்கள் இவ்வாறான இடங்களுக்குச் செல்லமாட்டார்கள். எதிரிக்கோ இவ்வாறான தந்திரோபாயம் படைநகர்த்தல் சுதந்திரத்தை மட்டுப்படுத்துகின்ற, இந்த உத்தி ஜேர்மனிய எகேர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, பிறியான்ஸ் (ரசியாவின் மாகாணம்) காடுகளில் வெற்றிகரமாகவும் பயன்படுத்தப்பட்டது. காட்டில் தேடுதல் மேற்கொண்டதுடன் ஜேர்மனியர்கள் எச்சரிக்கைக்காகச் சந்தேகத்திற்கிடமான ஒவ்வொரு உலர் சருகுச் சத்தம் எழுகின்ற இடங்கள், நெரிசலான பற்றைகள், இருளான இடங்கள், சாய்வான இடங்கள், பள்ளத்தாக்குகள், அத்துடன் இலக்கெதுவும் தெரியாதபோதும் தந்திரோபாய ரீதியில் ஆபத்தான இடங்கள் சகலவற்றிற்கும் சுட்டார்கள். இந்த உத்தியும் தனது முக்கியத்துவத்தை நியாயப்படுத்தியது. இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் இரண்டு பரவல் வரிசையில் ஒன்றிலிருந்து மற்றையது 50 மீற்றர் இடைவெளியில் நகர்வார்கள்.

ஆனால் நேரடியான அவதானிப்பிலிருந்து விலகும்படி எட்டச் செல்லமாட்டார்கள். இது தேடுதலுக்குச் சிறந்த தரத்தைத் தருவதுடன் மாத்திரமல்லாமல், பின் பக்கத்திலிருந்தும் பக்கவாட்டிலிருந்தும் எதிர்பாராத தாக்குதலுக்குள் அகப்படுவதையும் தடுக்கின்றது. உண்மையான சூழ்நிலைகளில் திறந்த பிரதேசங்கள், பள்ளத்தாக்குகள் போன்றவற்றின் நெடுகே மாத்திரம் நகரவேண்டிவருவதில்லை. அதற்குக் குறுக்காகவும் நகர வேண்டியுள்ளது. ஒரு தொடர் அல்லது குழு இவ்வாறான தடைப்பிரதேசத்தைக் கடக்கின்ற போது மற்றையது எதிர்பாராத தாக்குதலுக்குள் அகப்படா தவாறிருப்பதற்கான பாதுகாப்பை வழங்குகின்றது.

இத்தடைகளை சகலரும் ஒன்றாகக் கடப்பது தவறான முறையாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில், சூட்டாதரவு இல்லாமல் கீழிருந்து மேலே மலையை நோக்கி நகர்கின்ற போது சகலரும் பயனற்ற நிலையில் இருப்பதுடன், எதிரிக்குக் குழு இலக்காகவும் விளங்குகின்றார்கள். இவ்வாறான தடைகளுக்கு முன்னால் உள்ளுணர்விற்கமைய எதிரி குவிந்திருக்கின்ற இடங்கள், எதிர்பாராத சூட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகும் போது காப்பெடுக்கக்கூடிய இடங்கள் (சிறிய பள்ளங்கள், எறிகணை வெடித்த குழிகள், நீர் வாய்க்கால்கள், சாய்வுகள் போன்றன) ஆகியன சமரின் போது சிந்திக்காமல் கண்ணி வைக்கவேண்டிய இடங்களாகும். நீங்கள் மலைகளுக்கிடையிலுள்ள பிரதேசத்தால் நகர வேண்டியேற்பட்டால், உங்களிலிருந்து இடது பக்கமாக உயர்ந்த பகுதி இருக்கும் வண்ணம் நகர்ந்து செல்வதே நல்லது. ஏனெனில், இந்நிலையில் வலது பக்கத் தோளில் சுடுகலனைப் பொருத்தி விரும்பிய பக்கத்திற்கும் மேலேயும் சுட வசதியாக இருக்கும். மலை உங்களிலிருந்து வலது பக்கமாக இருக்குமானால் இடது கையில் சுடுகலனை வைத்திருப்பது சிறந்தது. இவ்வாறென்றால் சூட்டை மேற்கொள்வதற்காக நீங்கள் வலது பக்கம் திரும்பி வலது தோற்மூட்டில் சுடுகலனைப் பொருத்த வேண்டிய தேவையில்லை. இது இடதுபக்க ஒழுங்கு என அழைக்கப்படுகின்றது. இடது பக்கத்தில் பொருத்திச் சுடுவது அதிவேகமானதாகவும் இலகுவானதாகவும் இருக்கும். இந்த ஒழுங்கையும் மறக்கக்கூடாது.

தொடரணி அல்லது குழு மலைக்கு நகர்கின்றதென்றால், அதற்கும் கீழிருந்தும் பக்கவாட்டிலிருந்தும் சூட்டுக்காப்பு வழங்கப்படுகின்றது. மேலே ஏறிச் சென்றடைந்த குழு அங்கே தரித்து, கீழிருந்து மேலே ஏறி வருபவர்களுக்குச் சூட்டுக்காப்பு வழங்குகின்றது.

காட்டில் சிலசமயம் நெருக்கமாகப் படைகள் நகர்வது கடினமாக இருக்கின்றது. நகரக் கடினமாக இருக்கின்ற தரையமைப்பு (மலையைப்போலவே) எப்பொழுதும் முன்னோக்கி நகர்கின்றவர்களைத் தனித்தனியான குழுக்களாகப் பிரிக்க வைக்கின்றது. இவர்கள் பரவல் வரிசையில் நகரமுடிவதில்லை. மாறாக ஒற்றைவரிசை நகர்வு ஒழுங்கிலேயே செல்கின்றனர். காட்டுத் தேடுதல் ஒருமித்த கூட்டுத் தேடுதல் முறையாக மாற்றமடைகின்றது. சிறப்பணிகள் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்த பற்றாலியன்களில் செயற்படுகின்றனர். ஆனால் தமது சக தோழர்களுடன் சேர்ந்து கட்டமைப்பின்படியாகும். 15 - 16 பேர்களைக் கொண்ட இரு சிறப்பணிகள் ஒன்றுசேர்ந்து சாதாரண பொதுப்படைப் பிளாட்டூனாக மாறுகின்றது. பிரதேசத்தின் தரையமைப்பு இவ்வாறான பிளாட்டூனை விரும்பிய இடத்திற்குச் செல்ல உதவலாம். என்னென்ன சம்பவங்கள் சம்பவிக்கும் என்பதை எதிர்வுகூறமுடியாது. ஆகவே தான் எகேர்கள் எதிர்பாராத நேரடி மோதல்களை (காட்டில் அதிகமாக ஏற்படுகின்றவகைச்சமர்)எதிர்கொள்ளத் தயார்ப்படுத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இவ்வாறான சூழ்நிலைகளில் குழுவின் தனித் தந்திரோபாய உத்திகள் பொருத்தமானதாகும். காட்டில் எதிர்பாராதவிதமாகக் குழு எதிரியுடன் முட்டுப்பட்டால், செறிந்த, புயல் போன்ற சூட்டினால் அவனை நிலத்தில் படுக்கச் செய்கின்றதுடன், மறைப்புக்குள் தவழ்ந்து செல்லவும் நிர்ப்பந்தித்து, தரையோடு ஆணி வைத்தடித்தது போன்ற நிலைக்குள் அவனைத் தள்ளி, அவனது நகர்வுச் சுதந்திரத்தைப் பறித்து, குறிபொருந்திய சூட்டுக்கு அவன்தன் தலையைத் தெரியப்படுத்தா வண்ணமும் ஆக்கிவிடுகின்றது. காப்புச்சூடு வழங்குகின்ற அணி எதிரியைத் தரையோடு ஒட்டிய நிலையில் வைத்திருக்கின்ற தருணத்தில், உடனேயே பிரதான அணி தரையமைப்பைப் பயன்படுத்தியும் மரங்களின் மறைப்பைப் பயன்படுத்தியும் இடது பக்கமாக முன்னோக்கி வேகமாக ஓடிச்சென்று, எதிரிக்கு வலது பக்கத்திலிருந்து நுழைய முயற்சிக்கின்றது.

பொதுப் படைத் தந்திரோபாயத்திற்கமைய நகர்வொழுங்கில் செல்கின்ற எதிரி உங்களது காப்புச்சூடு வழங்குகின்ற குழுக்கெதிராகத் தாக்குதல் வரிசை நிலையெடுப்பிற்காகத் திரும்பத் தொடங்குவான். இந்த வரிசையைப் பக்கவாட்டாகக் குழு இலக்குகளைத் தாக்குகின்ற வடிவில் சுடுங்கள். நாங்கள் மேலே கூறிய இடது பக்க ஒழுங்கு தருகின்ற சாத்தியத்தைப் பயன்படுத்துங்கள். தொடக்கத்திலேயே வலது பக்கம் திரும்பிச் சுடுவது எதிரிக்கு வசதியற்றதாக இருக்கும். அத்துடன் அவனது சூட்டாளர்கள் வலது பக்கம் திரும்பித் தமது சகாக்களின் முதுகை நோக்கிச் சுடுகலனைப் பிடிக்கப்போவதுமில்லை. உங்களது சூட்டுக்காக பக்கவாட்டுப் பகுதி குறித்த சில நேரங்களுக்குத் திறந்துவிடப்பட்டதாகவே இருக்கும். இந்த நேரத்தில் அவன் வலது பக்கமாக நிலையெடுக்கும் சாத்தியத்தைத் தொலைத்து விடுகின்றான். சமர்ச் சந்திப்பின் போது முதலாவதாகச் சுதாரித்துக்கொண்டு எதிரியின் வலது பக்கத்திற்குச் செறிவான சூடுகளை மிக வேகமாகத் திருப்பி யார் தொடுக்கின்றார்களோ அவர்களே வெற்றியீட்டுகின்றார்கள்.

இந்த முறையிலேயே சிறப்புக் குழு எதிர்பாராதவிதமாக எதிரியுடன் முட்டுப்படும் வேளையில் செயற்படுகின்றது. அதாவது காப்பணி எதிரியைத் தரையில் படுக்கச் செய்ய, ஏனையோர் வேகமாக நகர்ந்து எதிரியின் பக்கவாட்டுக்குச் செல்கின்றது. அதிலும் வலது பக்கத்திற்குச் செல்வது மிகவும் விரும்பத்தக்கது. இதனைச் செய்வதற்குச் சூழ்நிலையும் பிரதேசமும் எப்பொழுதும் வசதியாக இருப்பதில்லை. ஆனால் இவ்வாறான சந்தர்ப்பம் இருக்குமானால் அதனைத் தவறவிடக்கூடாது. சமர்க்களத்தின் நிலைமைக்கேற்ப எதிரியை மணிக்கூட்டுத் திசையில் சுற்ற வைக்க வேண்டும். அத்துடன், அவன்மேல் நேர்ச்சூடுகளைத் தொடுக்கக்கூடிய தூரம்வரை நெருங்கவும் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட உத்திகள் காட்டுக் கொள்ளையர்களுக்கும் குதிரைக் கள்வர்களுக்கும் புதியவை அல்ல. இவ்வுத்திகள் நூற்றாண்டு காலமாகத் தமது பலன்களை நிரூபித்துள்ளன. பிரதான செயற்பாடு யாதெனில், இதனை அதியுச்ச உயர்வேகத்தில் செய்வதாகும். காட்டில் குறைந்தளவிலான படைப்பிரிவுகளுடனான சமர் குறைந்த நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. சூழ்நிலைக்கேற்ற முறைகள் ஆளணிகளுடனான பயிற்சியின் போது, இசைவாக்கத்திற்கு வரும்வரை அவசியம் பயிற்சி செய்ய வேண்டும்.

தொடர்வான்....

# அரசியல் அமைப்பு,பயங்கரவாத தடைச்சட்டம்,காணிவிடுவிப்பு தொடர்பில் அரசுக்கு நிபந்தனை விதித்த தமிழரசுக்கட்சி

## தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா

கேள்வி:- ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தேர்தல் இடம்பெற்று ஆட்சி அமைத்ததன் பின்னர் இரண்டு வருடங்களின் பின்னரான ஒரு சந்திப்பு ஒரு உத்தியோகபூர்வமாக இடம்பெற்றுள்ளது. இதிலே த.தே கூட்டமைப்பு அரசாங்கத்தின் பொறிக்குள் சிக்கப்போகின்றது என்றும் ஒரு செய்தி வெளிவந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அல்லது தமிழரசுக் கட்சி சார்ந்து நீங்கள் ஜனாதிபதியை சந்தித்ததன் காரணம் என்ன இதனுடைய அடுத்தகட்ட நகர்வுகளை எப்படி முன்னெடுக்கப்போகின்றீர்கள்?



பதில் :- இதுவொரு நீண்ட கேள்வி பல கேள்விகளை ஒரு கேள்வியிலே இணைத்திருக்கின்றீர்கள் சென்ற 25 ஆம் திகதி காலையில் ஜனாதிபதி அவர்களுடைய அழைப்பில் அவர்களது செயலகத்திலே நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய கட்சிகள் சந்தித்து பேசினோம். திரு. சம்பந்தன் அவர்கள் தேசிய கூட்டமைப்பினுடைய தலைவர் தலைமையில் நாங்கள் சந்தித்தோம். அந்த விடயத்தில் ரெலோ தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததை எண்ணி மனவருத்தமடைந்தோம். அதற்கு முன்னர் நாங்கள் அரசாங்கத்துடன் பேசுவதற்காக சந்திப்பது பற்றி பேசிய பொழுதும் இந்த கருத்துக்கள் ஆராயப்பட்டு நீங்கள் அப்படி பெறாமல் கருத்து இருக்குமானால் நாங்கள் மனவருத்தமடைகின்றோம். இந்த விடயத்தில் நாங்கள் மூன்று தேசிய கூட்டமைப்பிலே இருக்கின்ற கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று நானே வலியுறுத்தி சொல்லியிருக்கின்றேன். வராமல் விடுகின்ற தீர்மானத்திற்கு வரவேண்டாம் என்று தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றேன். அந்த உரிமை எனக்கும் இருந்தது. இருக்கின்றது. இப்பொழுது நீங்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு வருவதாக இருந்தால் ஜனாதிபதி அவர்கள் தன்னுடைய தேர்தல் காலத்திலும் அவர் தெரிவு செய்யப்பட்டதற்கு ஜனாதிபதி அவர்கள் 65 இலட்சம் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியாக வந்தார் என்பதற்கு பின்னர் பாராளுமன்றத்தில் இருக்கின்ற பொழுதும் அவர் அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்பது பற்றி பேசியிருக்கின்றார்.

அதற்கு அடிப்படையாக பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவ கருத்தில் அவ்வாறான அரசியலமைப்பை உருவாக்கப்போகின்றேன் என பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் கூறியிருந்தார். ஆனால் அவரது மிகப்பெரும் தவறு என்னவென்றால் ஒற்றை ஆட்சி பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவ ஆட்சி என்பவற்றை அவர் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார் என்பது தெளிவாக தெரிகின்றது. அதைவிட இந்த நாட்டில் 70 ஆம் ஆண்டுகளிலும் தந்தை செல்வா அவர்கள் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து நாங்கள் இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் நிலப்பிரச்சனை சிங்கள திட்டமிட் குடியேற்றங்கள் வரக்கூடாது அது எங்களது சொந்த பிரதேசத்தை பலவீனமாக்கிவிடும் என தந்தை செல்வா இரண்டு விடயங்களுக்காக தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். ஒன்று மலையகத் தமிழ் மக்களுடைய குடியுரிமை வாழ்க்கை தொடர்பாகவும் இரண்டாவதாக சிங்கள குடியேற்றங்கள் எங்களை மிகப் பலவீனமாக ஆக்கிவிடும் அது எங்களுடைய சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டு அரசியல் தீர்வு ஏற்படுகின்ற பொழுது நாங்கள் ஒரு தேசிய இனம் என்பது பாதித்துவிடும் என்பதற்காகவும் தந்தை செல்வா தமிழரசுக் கட்சியின் அடிப்படை தீர்மானங்களாக கொண்டிருந்தார். தீர்மானங்களும் மாநாடுகளுமே எடுக்கப்பட்டிருந்தன. அதற்கு அடுத்ததாக இலங்கை இனப்பிரச்சனைக்கான ஒரு தீர்வு சமஷ்டி கட்டமைப்பில் வடக்குகிழக்கு தமிழர்களுடைய தாயகத்திலே அவர்கள் தங்களுக்கு தாங்களே ஆளக்கூடிய சுயாதீன ஆட்சி இருக்க வேண்டும் என தந்தை செல்வா கொண்டிருந்தார். ஆனால் ஜனாதிபதி அவர்கள் தான் ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் அவர் குறிப்பிட்ட விடயம் எங்களுக்கு விரோதமாக இருந்தது. ஒரு அரசியலமைப்பை உருவாக்கப்போகின்றேன் என்றும் அதே நேரத்தில் அது பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவத்தை மையமாக கொண்டு அந்த அடிப்படையில் தான் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவேன். என்று ஒரு ஆணைக்குழுவையும் நியமித்திருக்கின்றார். அந்த ஆணைக்குழுவிற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும் ஏனைய தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளும் அரசியல் தீர்வுக்காக அறிக்கையை கொடுத்திருக்கின்றார்கள்.

அரசியலமைப்பிற்கு முன்னால் நாங்கள் தெளிவாக குறிப்பிட்டது என்னவென்றால் ஒரு அரசியலமைப்பை உருவாக்கும் பொழுது அதற்கான எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அரசியலமைப்பின் மீது நாங்கள் கொண்டிருந்த கருத்துக்கள் சமஷ்டி அரசியலமைப்பு வேண்டும் தமிழர்களினுடைய பிரதேசங்களில் ஒரு சுயாட்சி வேண்டும் என்றெல்லாம் நிலையில் அந்த வரலாற்றையெல்லாம் குறிப்பிட்டு இத்தனை ஆண்டு கால வரலாற்றின் பின்னணியில் நாங்கள் இப்பொழுது தமிழ் தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. அந்த சுயநிர்ணய உரிமையில் ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமானால் உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஒரு சமஷ்டி கட்டமைப்பில் வடக்கு கிழக்கு இணைந்த பாரம்பரிய தேசத்தில் அவர்கள் தாங்களே மக்கள் ஆள வேண்டும் என்ற அந்த உரித்தை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். இறுதி வரியிலே நாங்கள் குறிப்பிட்டது என்னவென்றால் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இந்த அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் வெளியக சுயநிர்ணய உரிமையை பாதிக்கும் உரித்து உண்டு என்பதையும் நாங்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றோம். ஆனால் நாங்கள் அப்படி கூறியதற்கு பின்பு நீண்ட நாட்களாக இந்த அரசியலமைப்பு சம்மந்தமாக பேச்சு இருந்ததாகவும் தெரியவில்லை.

அதே நேரத்தில் 9 பேர் கொண்ட ஆணைக்குழு ஜனாதிபதி சட்டத்தரணிகளாக இருந்தவர்கள் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளையும் கொண்ட அந்த அவையிலே நாங்கள் இதனை மிகத்தெளிவாக எவ்வாறான அரசியலமைப்பு இருக்க வேண்டும் எவ்வாறு இந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் அதனுடைய பின்னணி வரலாறு எல்லாவற்றையும் குறிப்பிட்டிருந்தோம். அதற்கு மேலதிகமாக அதற்கு வேறு எந்த பேச்சும் இடம்பெறாத நிலையில் அந்த விடயத்தில் அரசியலமைப்பு ..... அந்த விடயமாக நாங்கள் சந்தித்து பேச வேண்டும் என்று ஒரு கோரிக்கையை அனுப்பியிருந்தார். ஆனால் அதற்கான திகதிகள் குறிப்பிடப்பட்டும் இடம்பெற்றிருக்கவில்லை. அதனடிப்படையில் ஜனாதிபதியை அவர்கள் மிக அண்மையிலே எல்லோருக்கும் தெரிந்த விடயம். தமிழ் பாராளுமன்றத்தில் தமிழ் தேசியத்தை அடிப்படையாகக்கொண்ட அனைத்து கட்சி பாராளுமன்ற செயலிகளும் ஜனாதிபதி மாளிகையின் முன்னால் ஒரு ஆர்ப்பாட்டத்தை செய்திருந்தார்கள். இனப்பிரச்சனை தீர்வாகவும் ஏனைய அன்றாடம் இடம்பெறுகின்ற பிரச்சனைகள் சம்மந்தமாகவும் தீர்வை பெறுவதற்கு நாங்கள் சந்தித்து பேச வேண்டும் என்ற குரல் எழுப்பியும் அங்கே பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்திருந்தார்கள். அதற்கு பின்னர் ஜனாதிபதி அவர்கள் சென்ற மாதம் 15 ஆம் திகதி திரு. சும்மந்தன் அவர்களுக்கு நாங்கள் சந்தித்து பேசுவோம் என்ற ஒரு செய்தியை கடிதத்தின் மூலமாக அனுப்பியிருந்தார். ஜனாதிபதியின் மாளிகைக்கு முன்னால் பல இணக்குகளை கொண்டு குறிப்பாக பொருளாதார நெருக்கடிகள் சம்மந்தமான விடயங்களை முன்வைத்து பாரிய போராட்டங்கள் இடம்பெற்றதால் அன்றைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு பின்னர் 25 ஆம் திகதி குறிப்பிடப்பட்டு நாங்கள் சென்று பேசியிருக்கின்றோம். ஆகவே அவர்கள் எந்த சந்தர்ப்பத்தில் வைத்தார்கள் என்பதை விட நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் மாளிகைக்கு முன்னால் நாங்கள் அவரிடம் எங்களுடன் பேச வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததையும் நீங்கள் அறிவீர்கள். எனவே ஜனாதிபதி அவர்கள் அதற்கு திகதியை குறிப்பிட்டு எங்களை அழைத்த நேரத்தில் நாங்கள் சென்றிருந்தோம். அதில் ரெலோ இயக்கம் துரதிருஷ்டவசமாக வந்திருக்கவில்லை. அதைப் பற்றி எங்களிடம் தெரிவித்திருந்தார் ஆகவே அந்த பேச்சு வார்த்தையில் நாங்கள் பல தடைவ கூடி ஆராய்ந்து இந்த பேச்சு வாரத்தையை நாங்கள் எப்படி கையாள்வது என்ற விடயங்களை பரிசீலித்திருக்கின்றோம். அதிலே அரசியல் தீர்வு ஒன்று ஏற்பட வேண்டுமானால் 6 மாதங்களுக்குள் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அதற்கு முன்னர் குறிப்பாக காணி விடயங்கள் ஒவ்வொரு நாளும் எங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட கட்சி தலைவர்கள் தொண்டவர்கள் அந்த காணிக்கு சொந்தகாரர்களாக இருப்பவர்கள் தங்கள் தங்கள் காணிகளை இத்தனை ஆண்டுகளிலும் எத்தனை ஆட்சிகள் வந்ததன் பின்னரும் அபகரிக்கும் வேலைகளுக்காக நில அளவையாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு அந்த நிலங்களை அபகரிப்பதற்காக அல்லது தங்களுக்கு எடுத்துக்கொள்வதற்காக அளவை வேலைகளிலே ஈடுபடுவதற்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த இடங்களை சேர்ந்த மக்களும் தமிழ் தலைவர்களும் கட்சிகளை சேர்ந்தவர்களும் நாங்கள் அனைவரும் நேரடியாக அந்த சம்பவத்திலே போராடி அந்த அளக்கின்ற வேலைகளை நாங்கள் நிறுத்தியும் இருக்கின்றோம். அதற்கு முன்னரே ஏராளமான நிலங்கள் போர்க்காலத்திலும் அதற்கு பின்னரும் சமகாலத்திலும் அரசு தரப்பினரால் இராணுவத்தினரால் குறிப்பாக அந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் நூற்றுக்கணக்கான போராட்டங்களில் தளர்த்திருக்கின்றோம் மீதி நீதிமன்றத்திலே என்னுடைய பெயரில் கூட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு எங்களுக்கு சாதகமான தீர்வுகள் இராணுவ கட்டமைப்பில் இருக்கின்ற அபகரிக்கின்ற மக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிக்க வேண்டும் என்ற தீர்ப்பை 2007 ஆம் ஆண்டிலே நாங்கள் பெற்று அதனடிப்படையிலும் போராட்டங்கள் காரணமாகவும் ஓரளவு நிலங்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்த நிலங்கள் பேச்சு வாரத்தை நடந்த பொழுது குறிப்பாக பலாலி விமான நிலையத்தைப் பற்றியும்ஜனாதிபதிஅவர்கள்குறிப்பிட்டிருந்தார். உடனடியாக நான் கூறினேன் நான் அந்த பிரதேசத்தை சேர்ந்தவன் தான் உச்ச நீதிமன்றிலே எனக்கு வழக்குகள் இன்றும் இருக்கின்றன. நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்புக்களும் இருக்கின்றன. கிட்டத்தட்ட பலாலி விமான நிலையத்திற்கு பக்கத்திலே கிழக்கு பக்கமாக தற்பொழுதும் 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. விவசாய நிலங்கள். விவசாயிகளினுடைய நிலங்கள் அதே போல கரையோர பிரதேசங்களிலும் அவர்கள் மீன்பிடி தொழிலை செய்வதற்கு அங்கே துறைமுகம் உருவாக்கப்பட்டிருந்த பொழுது அதில் இன்னும் 539 குடும்பங்கள் 500 க்கும் மேற்பட்ட நிலப்பரப்பு இராணுவத்தினரின் கையிலே இருக்கின்றன என நான் நேரடியாகவே குறிப்பிட்டிருந்தேன். அது உதாரணமாக சொல்லப்பட்ட விடயங்கள். நாங்கள் 4 அல்லது 5 விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசியிருக்கின்றோம்.

ஒன்று அரசியலமைப்பு சம்மந்தமாக மொழி பெயர்ப்பு நிறைவடைந்ததும் நாங்கள் அரசியலமைப்பிற்கான பேச்சு வார்த்தையை நடத்துவோம் என ஜனாதிபதி அவர்கள் ஒப்புக்கொண்டு முன்வைத்திருந்தார். இரண்டாவதாக நிலப்பிரச்சனை முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கு நாங்கள் நீண்ட நேரம் நாங்கள் பல விவாதங்களை செய்திருக்கின்றோம் பல முன்மொழிவுகளைக் கூட நாங்கள் கொடுத்திருக்கின்றோம். அந்த விடயத்தில் அவர் அப்படி இராணுவ எடுக்க மாட்டோம் தனியாருடைய நிலங்கள் அல்லது மக்களுடைய தேவைகளுக்காக வீடுகள் அமைத்தல் விவசாயம் செய்தல் அபிவிருத்தி செய்தல் என்ற விடயங்களுக்காக அந்த மக்களுக்கு நிலங்களை திருப்பி கொடுப்பதற்கும் நாங்கள் இணக்கமாக இருக்கின்றோம் என்று ஒரு பதிலை சொல்லியிருந்தார்கள். மூன்றாவதாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் என்றும் இரண்டு விடயங்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள். இறுதிக்கட்ட போராட்டத்திலே சரணடைந்தவர்கள் போன்றோருக்கான நீதி வழங்கல் பற்றி பேசினோம். அவர்கள் எங்கே என நாங்கள் கோரினோம். அவர்களது பெற்றோர்கள் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் கோரினோம். ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பதன் மூலம் அதனை தீர்த்து வைக்க முடியாது மக்கள் அதனை கோபமாக இருக்கின்றார்கள் என கூறினோம். அதற்கு அவர்கள் அதனை அந்த பிரச்சனைக்கான தீர்வாக நாங்கள் கொடுக்கவில்லை அவர்களுக்கு நாங்கள் ஒரு இடைக்கால உதவியாக செய்தோம் என குறிப்பிட்டார்கள். நாங்கள் அதனை தெளிவாக சொன்னோம் அந்த மக்கள் காணாமல் போனவர்கள் இராணுவத்திலே இறுதிப்போர்க்காலத்தில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது. அவர்கள் எங்கே. அவர்களது குடும்பத்தினருக்கு உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதைத் தான் அவர்கள் கோருகின்றார்கள்.

**தொடரும்...**

**நேர்காணல் :இரணியன்**

# பொருளாதார ரீதியில் வல்லரசுகளுடன் மோத தயாராகும் இலங்கை அரசு




இன்றைய அரசியல் சூழ்நிலையில் இந்த நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியை கண்டுள்ள நிலையில் மக்கள் பட்டினிச்சாவு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். போருக்கு முன்னரான பின்னரான காலப்பகுதிகளை பார்க்கின்ற பொழுது டட்லி சேனநாயக்கா தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை ஒரு இனவாத அரசியலையே அவர்கள் மேற்கொண்டு வந்தார்கள் என்பது வரலாறு.

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு அல்லது இந்த நாட்டிலிருக்கின்ற பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டது என்றே கூறவேண்டும். மற்றுமொரு போருக்கு இந்த அரசு தயாராகின்றதா என்றவொரு கேள்வி தற்பொழுது பரவாலாக எழுப்பப்பட்டுவருகின்ற நிலையில் அது ஏன் எதற்காக எப்படி என்ற காரணங்களை கொண்டு பார்க்க வேண்டிய சூழல் தற்பொழுது உருவாகியுள்ளது.

முன்பு நடந்த ஆட்சியாளர்களின் ஆட்சி கட்டமைப்புக்களை பார்க்கும் பொழுது இந்திய அரசுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் இடைநெடுவில் இந்தியா தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்றது இந்த போரை முடிவுக்கு கொண்டுவர இந்திய அரசுக்கு விருப்பமில்லை. தொடர்ந்தும் இந்திய அரசாங்கத்திடம் கையேந்த வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய தமிழ் தலைவர்கள் கொந்தளிப்பை ஏற்படுத்துகின்றார்கள் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைமையில் தீர்வு வழங்கக்கூடாது என்பதில் இலங்கை அரசு அன்றிலிருந்து இன்றுவரை தீர்க்கமான முறையிலே செயற்பட்டு வந்தது. அந்த நிலையில் தமிழ் தரப்பை வைத்தே தமிழ் தரப்பை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு செயற்பட்டது.

போராட்ட உத்திகளை ஆயுத தரப்பினர் மாற்றியமைக்கின்ற அல்லது சரணாகதியடைகின்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டமையினால் தமிழீழ விடுதலைப்புலிகள் வடகிழக்கு தமிழர் தாயகம் இணைந்த போராட்டத்தை இலங்கை அரசிற்கு எதிராக முன்னெடுத்தனர். இதன் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகள் தனித்துவமான இயக்கமாக கடந்த 30 ஆண்டு காலமாக போரிட்டனர். அதன் பின்னர் மாவிலாறில் இருந்து ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் எவ்வாறு முடிவடைந்தது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. 2 இலட்சம் பொதுமக்கள் உட்பட ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர் காணாமல் போனர் பலர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டனர் என்பதே வரலாறு. தொடர்ந்தும் தமிழினத்தை ஏமாற்றுகின்ற ஒரு அரசியலையை தமிழ் அரசியல் தரப்புடன் இணைந்து இந்த அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. இந்த நிலை தொடருமானால் தமிழ் மக்களுக்கான ஈழக்கனவு என்பது சிதைக்கப்படும் அதற்காகவே இலங்கை அரசு தமிழ் அரசியல்வாதிகள் ஒருசிலருக்கு பதவிகளை வழங்கி தம்மோடு இணைத்து செயற்படுத்தி வருகின்றது. ஒரு இனத்தின் அடக்குமுறையை எதிர்த்தே 1983 - 1987 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் அதனை தொடர்ந்து 1990, 2000, 2009 யுத்தம் முடிவுறும் காலப்பகுதிகள் வரையிலும் இனவாத அரசாங்கத்தின் இனவாத போக்கு தீராத வடுக்களாக தமிழர் தாயகப்பகுதி எங்கும் தொடர்கிறது. யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதே தவிர யுத்த காலத்தில் இந்த நாட்டில் பொருளாதார தட்டுப்பாடுகள் இருக்கவில்லை. போதியளவு பொருளாதார வசதிகள் இருந்து வந்தன. தற்பொழுதும் சிங்கள தமிழ் மக்களின் ஒரு கதாநாயகனாக பிரபாகரன் திகழ்கின்றார். இந்த நாட்டை அந்நிய நாட்டுக்கு தாரைவார்க்கின்ற அரசாங்கம் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை அரசாங்கத்திடம் கேட்டிருந்தால் அதனை கொடுத்திருந்தால் இந்த நாட்டில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை என சிங்கள மக்களும் இன்று கூக்குரல் விடுகின்றனர்.

இலங்கையின் பொருளாதார நிலைமை என்பது பாரிய வீழ்ச்சியை கண்டுள்ள நிலையில் தொடர்ந்தும் அரசாங்கத்தை கொண்டுசெல்ல முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தற்பொழுது ஆட்சியில் இருக்கின்ற குடும்ப அரசியல் என்றே கூறப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரம் முக்கிய இடம் பிடிக்கின்றபொழுது தான் அந்த நாடு வறுமைக் கோட்டிலிருந்து மீளக்கூடிய சூழல் உருவாகும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை குழிதோண்டி புதைக்கின்ற அல்லது அவர்களின் வளத்தை சுரண்டுகின்ற செயற்பாடுகளையே அவர்கள் இதுவரையில் முன்னெடுத்து வந்துள்ளார்கள். அதைப்போன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் தமது போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில் ஏனைய நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத்தை வீழ்த்த முடியாத ஒரு சூழல் காணப்பட்டது.

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமது ஆயுத போராட்டத்தை முன்னெடுத்து வந்தால் பூகோள ரீதியாக தாம் இந்த நாட்டுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாத சூழல் உருவாகும் என்ற காரணத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை முற்றாக அழித்தொழிப்பதற்கான தீர்மானங்களில் அரசாங்கம் இந்தியா சீனா போன்ற நாடுகள் முன்னெடுத்தனர். அதற்கு ஆதரவாக 48 நாடுகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை இதுவரையிலும் எந்தவொரு நாடும் அங்கீகரிக்கவில்லை.


10 ஆண்டுகள் முழந்த நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் கட்டமைப்பு இயங்குவதற்கு ஒருசில நாடுகள் அங்கீகாரத்தை வழங்கியுள்ளன. இத்தகைய சூழலில் அரசியல் ரீதியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை தமிழ் தரப்பிற்கு இருக்கின்றது. அதே நேரம் நாட்டின் இறையாண்மையையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை தமிழ் தரப்பிற்கும் இருக்கின்றது. இலங்கை அரசை பொருத்தவரையில் டயஸ்போராக்களின் அனுமதியோடு இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அவர்கள் உடன்படப்போவதில்லை. காரணம் அவர்கள் புலம் பெயர்ந்த தமிழர்கள் என்ற வகையிலும் அவர்களிடம் நாம் பிச்சை கேட்பது விரும்பத்தக்க ஒன்றல்ல என்பதே ஆகும். ஆனால் வெளிநாடுகளில் வாய் திறந்து கடனை இந்த அரசாங்கம் கேட்கின்றது வடகிழக்கு தமிழர் தாயகம் டயஸ்போராக்களினால் (நாடு கடந்த தமிழீழ அரசு) செழிப்பாகிவிடும் என்ற பயம் இலங்கை அரசிற்கு இருக்கின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசத்தை யுத்தம் முடிவடைந்து ஒப்பு நோக்குகின்ற பொழுது அது பாரிய வளர்ச்சியை கண்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற பொழுது கட்ட இடிபாடுகள் சிங்கள தரப்பில் இறப்புக்கள் சிங்கள பகுதிகளில் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக தமிழர்களின் சொத்துக்களையே அரசாங்கம் திட்டமிட்டு அழித்து வந்தது. இவ்வாறான நிலையில் யுத்தம் முடிவடைந்த நிலையிலும் இன்று வடக்கு கிழக்கு பாரிய அபிவிருத்திகளை கண்டுள்ளது. பாரியளவில் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை ஈட்டி வடபகுதியை ஒரு செழிப்பான பகுதியாக மாற்றி வருகின்றார்கள். இவ்வாறான ஒரு சூழலில் தான் அரசாங்கம் ஒரு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இதிலிருந்து மீட்சி பெறுவதற்கு பல வருடங்கள் ஆகும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டிவருகின்ற பொழுதிலும் அரசாங்கம் தான் நினைத்ததையே சாதிக்க வேண்டும் என விரும்புகின்றது.

இந்த நாட்டை அந்நிய நாட்டிற்கு தாரை வார்க்கின்ற ஒரு செயற்பாட்டை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வந்துள்ளமை என்பது சர்வதேச வல்லரச நாடுகளின் கேள்விக்குள்ளாகியுள்ளது. 2 வருடத்தில் இலங்கையில் இன்னொரு ஆட்சி மாற்றம் ஏற்படுமோ என்ற அச்ச நிலைப்பாடு தோன்றியுள்ளது. ஆனாலும் ஒரு தேர்தலை நடத்துவதற்கு தற்போதைய சூழலில் அரசாங்கத்திடம் பணம் இல்லை. புவியியல் காரணங்களை பார்க்கின்ற பொழுது இலங்கையில் அனைத்து வளங்களும் காணப்படுகின்றது இயற்கையான காப்பரண்கள் காணப்படுகின்றது உலகப்போர் ஏற்படுகின்ற பொழுது இலங்கை நாடானது மிகவும் ஓர் காப்பரணான நாடாக அமையப்பெறும் என்பதில் மாற்றமில்லை. இலங்கை தீவுக்குள் அந்நிய கப்பல்கள் நுழைகின்ற பொழுதிலும் அதனை தாக்கி அழிக்கின்ற ஒரு அமைவிடமாகவே இலங்கை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இலங்கை தீவானது ஒரு தந்திரோபாயங்கள் மிக்க ஒரு தளமாக அதன் அமைவிடம் அமைந்துள்ளது. இலங்கை நாட்டிற்கு கடன் கொடுத்த நாடுகள் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டத்தான் செய்யும். இனிவரும் காலங்களில் இந்த நாடுகளை இலங்கையில் இருந்து முற்றாக அகற்றுவதற்கு மிகவும் ஒரு கடினமான சூழலே உருவாகும்.

எனவே இவர்களுடன் ஒரு இராஜதந்திர போர் இந்த நாட்டில் அதி தீவிரமாக ஏற்படுத்தப்படும். தற்போதைய ஆட்சி மாற்றம் குறித்த நாடுகளுக்கு சாதகமாக அமைந்திருப்பதனால் மேலும் இந்த நாட்டை ஒரு அதாள பாதாளத்திற்குள் தள்ளி இந்த நாடு இன்னொரு நாட்டின் உதவியுடனேயே தங்கி வாழுகின்ற ஒரு சூழலை ஏற்படுத்திவிட்டால் இலங்கை திருநாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும் என்பதே சர்வதேச நாடுகளின் கணிப்பீடு. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலங்கை மீள்ச்சி பெறுவதற்கு வல்லரசுகளுடன் போரிடுகின்ற ஒரு நிலைப்பாடு தற்பொழுது உருவாகியுள்ளது என்பதே இன்றைய யதார்த்தம்.

**சுழியோடி**



# கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோரின் இன்றைய நிலை – அரியநேந்திரன்



போர் முடிவடைந்து ஒரு தசாப்தம் முடிவடைந்துள்ள நிலையில் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சனை தற்பொழுது தலைதூக்கியுள்ளது. இதற்கான தீர்வை நோக்கி அரசாங்கம் தனது காய் நகர்த்தல்களை நகர்த்தி வரும் அதே நேரம் தமிழ் மக்களினுடைய பிரச்சனையில் அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோர் தொடர்ந்தும் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். இன்றைய அரசாங்கத்தை பொறுத்தவரையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த நாட்டிலிருந்து நீக்குவதற்கு அவர்களுக்கு விருப்பம் கிடையாது. தொடர்ந்துவந்த அரசாங்கங்களும் அதனையே விதைத்து வருகின்றார்கள். மேலும் இந்தியாவிடம் கடன்களை பெற்றுக்கொண்டுவரும் இலங்கை, இந்தியா கூறுகின்ற விடயங்களை நிறைவேற்ற வேண்டிய தேவையும் அவர்களுக்கு உள்ளது. இந்த சூழ்நிலையில் நாம் பார்க்கின்ற பொழுது உண்மையில் ஒரு அநாகரீகமான ஆட்சியாளனின் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம். அவர்கள் கேட்கின்ற விடயங்களுக்கு அவர்கள் முதலில் சரியான பதில்களை கொடுக்க வேண்டும். அவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் உண்மையாக கொலை செய்யப்பட்டார்களா அல்லது அவர்களை எங்காவது வைத்திருந்தால் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் ஏனென்றால் அதற்கான காரணம் இன்னார் பொறுப்பு என்றால் அவர் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். அது இலங்கையிலே செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை என்ற காரணத்தினால் இலங்கை நீதி மன்றம் எங்களுக்கு நீதி தரமுடியாது என்பதற்காகத் தான் அது சர்வதேச ரீதியாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கேட்கின்றார்கள். ஆகவே இந்த விடயத்திற்கு சரியான தீர்வாக இருந்தால் சர்வதேசம் இதற்கு தலையிட வேண்டும். சர்வதேசம் தலையிட்டு காணாமல் போனோரின் கோரிக்கையை ஏற்று சரியான விசாரணைகள் நடாத்தி அது யாராக இருந்தாலும் அந்த குற்றவாளிக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது தான் சரியானதொரு தீர்வாக இருக்குமே தவிர நிவாரணம் வழங்குவதோ, அத்தாட்சி பத்திரங்கள் கொடுப்பதோ சரியல்ல. உதாரணமாக சுனாமி தாக்கம் அல்லது வெள்ளழிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் இறந்திருந்தால் அது சரி. வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டார் அல்லது சூறாவளியினால் கொண்டு செல்லப்பட்டார் என்பது வேறு ஆனால் இது அவ்வாறல்ல இதுவொரு இனப்படுகொலை அதற்கான நீதியை கேட்கின்றார்கள். அந்த இனப்படுகொலைக்கான நீதி சர்வதேச ரீதியாக வழங்கினால் மட்டும் தான் இதற்கான சரியான தீர்வு கிடைக்கும். இதிலே 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக முன்னாள் மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். இலட்சக்கணக்கான ஒரே பட்டியலில் மரணித்தவர்கள் என்றால் 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான் அதை கூறலாம். அதற்கு முன்னர் ஆயிரக்கணக்கானவர்களை தான் நாங்கள் பார்க்கலாம். மேலும் இந்த அரசாங்கமும் சரி தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் சரி கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுக்கான ஒரு தீர்வை அல்லது மரண சான்றிதழ்களை கொடுத்தால் அவர்களுக்கு பிரச்சனை வரும் என்ற காரணத்தினால் அவர்கள் பிற்போடுகின்றார்களா அல்லது இந்த மக்கள் அதாவது இனப்படுகொலைத்தாரிகள் என்று முத்திரை குத்தப்படும் என்பதற்காக இவ்வாறான நிவாரணங்களை கொடுத்து சமாளிக்கப்பார்க்கின்றார்களா? என்ற எண்ணக்கருக்களும் காணப்படுகின்றன. அவர்களின் நோக்கம் என்னவென்றால் அரசாங்கத்திற்கே தெரியும் இதில் சம்மந்தப்பட்டவர்கள் யார், எந்த தரப்பு, எந்த படை என்பதெல்லாம் தெரியும். அவர்களை முதலாவது காப்பாற்றுகின்றார்கள். இப்பொழுது நாங்கள் அந்த விடயத்தை அவர்களை காட்டிக்கொடுக்காமல் அவர்களை காப்பாற்றுவதற்காக தமிழ் மக்களை அதாவது காணாமலாக்கப்பட்டவர்களை சமாளிக்க வேண்டிய விடயத்தை தான் செய்கின்றார்கள். ஆகவே இந்த விடயம் என்பது அவர்களின் தரப்பிலிருந்து அரசாங்க தரப்பு என்று பார்க்கின்ற பொழுது அவர்கள் சமாளிப்பது என்பது அவர்களை காப்பாற்றுவது அவர்களுக்கு நியாயமாக இருக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அது அதற்கான நியாயமும் அல்ல அதற்கான நீதியுமாக இருக்காது.

விடுதலைப் போராட்டம் அகிம்சை ரீதியாக ஆயுத ரீதியாக பரிநாமித்து தற்பொழுது சர்வதேச ரீதியிலே சென்றுவிட்டது. ஆகவே சர்வதேசத்தின் மூலமாகத்தான் ஒரு தீர்வை எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். அது தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருக்கலாம் அல்லது வேறு கட்சிகளாக இருக்கலாம் இன்று எல்லா விடயத்தையும் சர்வதேசத்தை மையப்படுத்திக்கொண்டு தான் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த விடயங்களில் மிக முக்கியமான விடயமாக இருப்பது இனப்படுகொலை. இனப்படுகொலைக்கான தீர்வை நாங்கள் மறைத்துவிட்டு அல்லது தமிழ் மக்களால் ஏற்றுக்கொண்டு அதை சமாளித்துவிட்டால் அந்த இனப்படுகொலைக்கான நீதி என்பது நிச்சயம் வராது. அதைத்தான் நாங்கள் இதிலே கவனிக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது. எனவே இது விசாரிக்கப்பட வேண்டும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அது சர்வதேச ரீதியிலே மாத்திரம் தான் இதற்கு சரியான தீர்வாக அமையும் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களை சுட்டவர்கள் பிடித்துவைத்து முகமூடியதாக காட்டியவர்கள் அவர்கள் பல இடங்களிலே இருப்பதாகக் கூட பல ஊடகங்களில் கருத்துக்கள் வெளிவந்தது. தெட்டத்தெளிவாக யாழில் இருக்கக்கூடிய அனந்தி சசிதரன் அவர் நேரடியாக சொல்லியிருக்கின்றார் அதாவது எனது கணவர் சசிதரன் என்பவர் சரணடையப்பட்டு நேரடியாக பல இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டவர் என்று. ஆகவே பலர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். பலர் கைது செய்யப்பட்டு பல விடயங்களுக்கு பாவித்துவிட்டு பின்னர் அவர்களை இல்லாமல் செய்திருக்கின்றார்கள் அதிலே எந்த மாற்றுக்கருத்துமில்லை. வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களை உடனடியாக படுகொலை செய்யப்பட்ட விடயங்களும் இருக்கின்றது வெள்ளைக்கொடியுடன் வந்தவர்கள் கைதுசெய்யப்பட்டு காணாமலாக்கப்பட்ட விடயங்களும் இருக்கின்றன. கிழக்கை பொறுத்தவரையிலே ஒரு விடயம் இருக்கின்றது என்னவென்றால் முஸ்லிம்களால் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் இருக்கின்றார்கள், கிராமம் அழிக்கப்பட்ட வரலாறு இருக்கின்றது. இப்படி எல்லாம் இருக்க அதற்கான நீதி என்ன, கிழக்கு வடக்கு என்றில்லை இதிலே நான் கூறுகின்ற விடயம் என்னவென்றால் நான் வடக்கை மையப்படுத்தி கூறுகின்றேன். வடகிழக்கு தாயகத்திலே இவ்வாறான கொலைகள் 2006 ஆம் ஆண்டு மாவிலாற்றிலே போர் ஆரம்பிக்கப்பட்டது கிழக்கில் தான். அதிலிருந்து பலர் கொலை செய்யப்பட்டு திருகோணமலையில் இருந்து வாகரைக்கு வந்து வாகரை முகாமிலிருந்து பலர் கடத்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டு இருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு நகரிலே முகாமில் இருந்தவர்கள் கடத்தப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். அதைவிட படுவான்கரையிலே கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் நீங்கள் கூறியதைப்போன்று 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே இஸ்லாமிய ஊர்காவற்படையினரும் பிரேமதாஸ ாவின் அரசாங்கமும் இணைந்து பல கொலைகளை செய்து பலர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன இல்லையென்று இல்லை. ஆகவே எல்லா விடயங்களும் விசாரிக்கப்பட வேண்டும் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதும் ஏன் கிழக்கில் இருப்பவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட பலரும் இணைந்து இந்த போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள் இந்த நீதி வேண்டும் என்பதைத் தான் கூறுகின்றார்கள்.

ஆகவே வடகிழக்கிணைந்த போராட்டமாகத்தான் நாங்கள் இதைப் பார்க்கின்றோம். முள்ளிவாய்க்காலில் கூட மரணித்தவர்களில் பலர் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களும் இருக்கின்றார்கள் அதை நாங்கள் மறுக்க முடியாது. இதில் சரணடைந்த 600 பொலிஸார்களை சுட்டுக்கொன்றதாகவும் கருணாவின் மீது ஒரு குற்றச்சாட்டு இருக்கின்றது. அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையிலே அல்லது நீதிமன்றிலே இந்த வழக்கையும் தொடுத்திருக்கின்றார்கள். தற்பொழுது கருணா அவர்கள் அரசாங்கத்துடன் ஒரு அமைப்பாளராகத் தான் இருக்கின்றார்.


## வவுனியாவில் கடத்தப்பட்ட 30 வயது உடைய நபர் தொடர்பில் குறித்த வர்த்தகர் மயூரன் மீது தாயாரின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது.



வவுனியாவில் கடத்தப்பட்ட 30 வயது உடைய நபர் தொடர்பில் குறித்த வர்த்தகர் மயூரன் மீது தாயாரின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது குறித்த உரிமையாளருடன் தினப்புயல் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எனக்கும் கடத்திச்செல்லப்பட்டதாக கூறப்படும் நிரோஜன் என்பவருக்கும் எந்தவித கொடுக்கல் வாங்கல் கள் எதுவும் இல்லை அத்தோடு எமது நிறுவனத்தில் பணிபுரியும் சன் என்பவர் முகாமையாளர் கிடையாது அவர் சாதாரண ஊழியர் ஒருவரே...கடத்தப்பட்டவர் எனது நிறுவனத்திற்கு வந்து போயிருக்கிறார் அவர் அங்கு பணிபுரியும் சன் என்பவரின் கூட்டாளி நான் ஒரு தடவையேனும் குறித்த நபருடன் பழகவில்லை தொலைபேசியில் கூட உரையாடலில்லை. தேவையற்ற முறையில் எனது தொழில் நிறுவனத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான ஒரு ஊடக சந்திப்பில் ஆதாரமற்ற செய்தி பகிரப்பட்டுள்ளது. குறித்த ஊடகசந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகள் சந்தேகத்தை வலுப்படுத்துவதன் ஆதார பூர்வமாக கேள்விகள் முன்வைக்கப்படவில்லை.பொதுவாக சொல்லப்போனால் எனது நிறுவனத்தையும் எனது பெயருக்கும் கலக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்காக நான் எனது உத்தியோகபூர்வ சட்டத்தரனியை நாடியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் அன்று (27.03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.எனது மகன் பாலகிருஸ்ணன் நிரேஸ் அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி காணாமல் போயுள்ளார். அவர் தனது வீட்டில் இருந்து புறப்பட்டு குருமன்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்னால் தனது மோட்டர் சைக்கிளை நிறுத்திவிட்டு அவ் வர்த்தக நிலையத்திற்கு காணாமல் போன தினம் பிற்பகல் 5.02 இற்கு சென்றுள்ளார்.அதன்பிறகு அவன் தனது மோட்டர் சைக்கிளை எடுப்பதற்கு வெளியில் வரவில்லை. அவரது மோட்டர் சைக்கிளை 6.47 நிமிடத்திற்கு வேறு ஒருவர் வந்து எடுத்துச் செல்வதை சிசீரீவி வீடியோவில் காண முடிகிறது. இதனை நான் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளேன். இது தொடர்பில் நான் ஜனவரி 29 ஆம் திகதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தேன். எனது மகனை காணவில்லை என நான் முறைப்பாடு செய்தேன். ஆனால் எனது மகன் இரண்டு நாளாக வீட்டிற்கு வரவில்லை என தான் முறைப்பாட்டு கொப்பியில் எழுதப்பட்டுள்ளது. நான் கொழும்பிலும் இது தொடர்பில் அண்மையில் முறைப்பாடு செய்துள்ளேன். பொலிசார் தேடிக் கொண்டிருப்பதாக கூறுகிறார்களே தவிர. இரண்டு மாதங்களுக்குள் எந்தவித காத்திரமான பதிலும் எனக்கு கிடைக்கவில்லை. செட்டிகுளத்தில் இருந்து நபர் ஒருவர் என்னிடம் 15 இலட்சம் கப்பம் கோரினார். மூன்றரை இலட்சம் உடனடியாக தந்தால் மகனை விடுவதாக கூறியிருந்தார். அவர் பொலிஸ் முறைப்பாட்டு துண்டின் பிரதி, மகனின் போட்டோ. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் அவர்களின் கடிதம் என்பவற்றை தருமாறு கோரினார். நாம் குறித்த நபரின் குரல் பதிவை பதிவு செய்து பொலிசாரிடம் கொடுத்தோம். அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். போதியளவிலான ஆதாரம் இல்லை என அவரை விடுவித்துள்ளதாக கூறுகிறார்கள். ஆனால் அந்த நபரை விசாரித்தால் எனது மகனை கண்டு பிடிக்க முடியும். எனது மகன் குருமன்காடு பகுதியில் உள்ள குறித்த வர்த்தக நிலையத்தில் தனது இரண்டரை வருட உழைப்பு பணத்தை வழங்கியுள்ளார். குறித்த வர்த்தக நிலையத்தின் முகாமையாளிடம் 85. 90 இலட்சம் ரூபாய் வரை செலுத்தியுள்ளார். தனது 30 ஆவது வயதில் மகன் புதிய தொழில் செய்ய திட்டமிட்டு இருந்தார். அந்தப் பணத்தைக் கேட்டு சென்ற போது தான் அவர் கடத்தப்பட்டுள்ளார். இதுவரை அவரை விடவில்லை. இரண்டு மாதம் கடந்து விட்டது. நான் ஒவ்வொரு இடமாக தேடி வருகின்றேன். ஊடகங்கள் மூலமாவது நீதி கிடைக்குமா என நம்பித் தான் இங்கு வந்துள்ளேன். எனது மகனை பிடித்து வைத்திருக்கிறார்கள். அவரை வைத்து என்ன செய்கிறார்களோ தெரியாது? எனது மகனின் மோட்டர் சைக்கிளும் இதுவரை இல்லை. அவரது வங்கி அட்டைகளும் இல்லை. அவரது வங்கி கணக்குகள் பொலிசாரிடம் கொடுத்தோம். அவர்கள் பார்க்கிறோம் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. குறித்த வர்த்தக நிலையத்திற்கு சென்ற நிலையிலேயே அவரை காணவில்லை. அதனால் அதன் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும். எனது மகன் தனது நண்பர் ஒருவரின் 5 இலட்சம் பணத்தை வாங்கி குறித்த வர்த்தக நிலையத்திற்கு வழங்கியுள்ளார். எனது மகன் காணாமல் போன பின் மகனின் நண்பர் குறித்த வர்த்தக நிலையத்திற்கு சென்று தனது 5 இலட்சம் பணத்தை தருமாறு கோரினார். இதன்போது நிரேஸ் கொடுக்கச் சொன்னது என்று கூறி 5 இலட்சம் பணத்தை கொடுத்துள்ளனர். எனது மகன் காணாமல் போன பின் தான் இந்தச் சம்பவம் நடந்தது. மகன் பணத்தை எப்போது கொடுக்கச் சொன்னவர் என்பதை அறிய வேண்டும். எனவே எனது மகன் கடத்தப்பட்டுள்ளார். அவர் கண்டுபிடிக்க பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஆயுதக்கட்சிகள் சிந்திக்கவேண்டிய தருணம் இன்றைய அரசியல்



தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்காக ஆரம்பகாலத்தில் ஆயுதமேந்திப்போராடிய ஆயுதக்கட்சிகளாக ரெலோ, புளொட், ஈரோஸ், தமிழீழ விடுதலைப்புலிகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. உமா மகேஸ்வரன் தலைமையில் புளொட், பத்மநாபாவின் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எப், பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப்புலிகள், பாலகுமார் தலைமையில் ஈரோஸ், சிறிசபாரத்தினம் தலைமையில் ரெலோ என இத்தலைவர்கள் ஒரே குறிக்கோளுடன் செயற்பட்டவர்கள். இந்தியாவின் கைக்கூலிகளாகச் செயற்பட்டதன் விளைவு ஏனைய ஆயுதக்கட்சிகளின் தலைமைகளை ஓரங்கட்டி தமிழீழ விடுதலைப்புலிகளும், ஈரோசின் ஒரு சாராரும் இறுதிவரை சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடினார்கள். இக்காலகட்டத்தின் போது ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எப், புளொட், ஈ.பி.டி.பி போன்ற இயக்கங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தார்கள். இவர்களுடன் விடுதலைப்புலிகளிலிருந்து பிரிந்து சென்ற கருணா, பிள்ளையான் போன்றவர்களும் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து விடுதலைப்புலிகளுக்கு துரோகம் செய்தார்கள். அன்று இவர்கள் இழைத்த துரோகத்திற்கு இன்று பிராயச்சித்தம் தேடும் வகையில் இவ்வாயுதக்கட்சிகள் செயற்பட முயற்சிக்கின்றன. ஆனால் இவர்களின் அட்டகாசங்களை மக்கள் நன்கு அறிவார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் இதுவரையில் வகைதொகையின்றி தமிழ் மக்களைக் கொலை செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்களும் இருக்கிறது.

தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கும் இக்கட்சிகள் மக்களுடன் இணைந்து போராட்டங்களைச் செய்வதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது. நல்லாட்சி என்று கூறிக்கொண்டு தமிழ் இயக்கங்களை பலவீனப்படுத்தும் மற்றொரு செயற்பாட்டை அரசு மறைமுகமாகச் செய்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் உள்வாங்கிக்கொள்கிறது எனக்கூறுகின்ற பாட்டாளிக் கட்சிகள் தாம் உள்வாங்கப்படுவதை மறைத்து ஏனையவர்கள் மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளைத் தவிர ஏனைய ஆயுதக்கட்சிகள் எவ்வாறு உள்வாங்கிக்கொள்ளப்பட்டது என்ற ஒரு சிறு விடயத்தைப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. ஆதாரம் இல்லாமல் போலியான செய்திகளை வெளியிடுகிறார்கள் என பலரும் நினைக்கக்கூடாது என்பதற்காக குறிப்பாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற இயக்கங்கள் பொது மக்களிடமும், வியாபார கடைகளில் இருந்தும் பணம் வசூலித்தார்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கிறது.

சமூக அமைப்புக்கள் என்று கூறிக்கொண்டு இவ்வாயுதக்கட்சிகள் எல்லாம் ஈ.பி.டி.பி உட்பட மக்கள் மத்தியில் சென்று ஒரு ஆர்ப்பாட்டத்தை அல்லது சமூகங்களுக்கிடையிலான ஒரு செயற்பாட்டை முன்னெடுக்கும் போது இவர்களின் முன் வருவதற்கு மக்கள் பயப்படுகிறார்கள். மக்கள் புரட்சி என்பதும் ஒரு சமூக நீதிக்கானப் போராட்டம் என்பதும் மக்களாலேயே மேற்கொள்ளப்படவேண்டும். ஒரு குழு என்ற போர்வையில் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் தமது கட்சிகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் செயற்படுபவர்கள் பொது அமைப்புக்களில் இருக்கிறார்கள். இவர்களின் செயற்பாடுகள் பக்கச்சார்பாகவே இருக்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைப் பொறுத்தவரையில் ஆரம்பகட்டத்தில் ஒன்றாக இருந்து அதன் பின்னர் வரதர் அணி, சுரேஸ் அணி, டக்ளஸ் தேவானந்தா அணி, ஈரோஸ் அணி என நான்காகப் பிரிவடைந்தது. தற்போதைய போராட்டங்களில் இவ் நான்கு கட்சியின் பிரமுகர்களுமே கலந்துகொள்கிறார்கள். இனம் இனத்தையே சேரும் என்பதைப்போல் தற்போதைய விடயங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டது. ஆரம்பத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராட புறப்பட்ட இயக்கங்களை ஊக்குவித்து உற்சாகம் கொடுத்து அனைத்து வசதிகளையும் வழங்கி இலங்கை அரசுக்கு எதிராக போரை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கியது. ஆனால் துரதிஷ்டவசமாக விடுதலைப்புலிகளினால் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட ஏனைய இயக்கங்கள் மீதும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்ந்தது. அதன் பின்னர் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல். எவ் போன்ற இயக்கங்கள் இக்கொலைக்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனக்கூறி, விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவத்துடன் இணைந்து போரை ஆரம்பித்தது. புளொட் இக்காலகட்டத்தில் தனித்து நின்றதன் காரணமாக கல்லாண்டகுளம், தம்பனை, முசல்குட்டி, முள்ளிக்குளம் போன்ற பகுதிகளில் விடுதலைப்புலிகள் புளொட் கட்சிக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதல்கள் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் பின் புளொட் கட்சியும் விடுதலைப்புலிகளுக்கு எதிரானத் தாக்குதல்களை மேற்கொண்டது. ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலை மையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டது. இது வரலாற்றுச் சுருக்கம்.

இந்திய இராணுவத்தினரால் உள்வாங்கப்பட்ட ஆயுதக்கட்சிகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொண்டபோது அனைத்து ஆயுதக்கட்சிகளும் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்ற கோரிக்கை இந்திய இராணுவத்தால் முன்வைக்கப்பட்டது. அதற்கமைய ஆயுதங்களை ஒப்படைத்த அனைத்து ஆயுதக்கட்சிகளும் அநாதரவற்ற நிலையில் நிற்கும் வேளையில் மீண்டும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஈழக்கனவு சிதைக்கப்பட்டது. இலங்கையின் நாலாப்புறங்களிலும் தமிழ் மக்கள் இறந்து கொண்டிருந்தனர். இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் இலங்கை அரசுடன் நட்புறவினை பேணிக்கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் செயற்பட்ட விடுதலைப்புலிகள். இந்திய இராணுவம் இந்நாட்டை விட்டு வெளியேறும் வரை தமது போராட்டங்களை நடத்தியது. இதற்கு இலங்கையின் அப்போதைய ஆட்சியாளர் பிரேமதாசா அரசே ஆயுதங்களை வழங்கியது.

விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிய இந்திய அரசாங்கத்தையும், விடுதலைப்புலிகளையும் பிரித்தாளும் ஒரு தந்திரோபாயத்தை இலங்கை அரசு மிக நுட்பமாக மேற்கொண்டது. இதனது விளைவு இறுதியில் முள்ளிவாய்க்கால் வரை போராட்டங்கள் கொண்டு செல்லப்பட்டது. பொதுவாக சகோதரப் படுகொலைகள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் விடுதலைப்புலிகள் இறுதிவரை தமது ஈழக்கனவின் இலட்சியத்தோடு போராடியவர்கள். இந்திய இராணுவம், இலங்கை இராணுவத்துடன் இவ்வாயுதக்கட்சிகள் இணைந்து செயற்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ் மக்கள் மீதும் தமது வன்முறைகளைக் கட்டவீழ்த்துவிட்டிருந்தனர். இவர்களை அக்காலத்தில் இராணுவ ஒட்டுக்குழுக்கள் என்றே சொல்லுவார்கள். இவ்வியக்கங்கள் தொடர்பில் தற்போதைய தலைமுறையினர் படிக்கவேண்டும். இவர்கள் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடவேண்டும் என்பதற்காக தமிழினத்தை ஏமாற்றக்கூடாது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலும் கூட வன்னியில் இருந்து வந்த மிக முக்கியமாக விடுதலைப்புலிகளின் தலைவர்களை இவ்வாயுதக்கட்சிகளைச் சார்ந்தவர்கள் காட்டிக்கொடுத்தனர். இக்காலத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் இரு இயக்கங்களும் த.தே.கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டது. அதன் பின்னர் புளொட் இயக்கம் த.தே.கூட்டமைப்புடன் இணைந்து செயற்படலானது. ஒரு கூட்டுப்பலம் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியமானது. தேசியத் தலைவர் பிரபாகரனால் த.தே.கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்கு ஆலாசனையாளராக ஊடகவியலாளர் சிவராம் அவர்கள் செயற்பட்டார் என்பது உண்மை.

ஆனால் இதனை தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் மறுத்திருக்கின்றார் எனக்கூறி அரசியல் நடத்தப் பார்க்கிறார்கள். அவர் ஏன்? எதற்காக? அப்படிக் கூறினார் என்ற விடயத்தைக் கேட்கவில்லை. ஒரு வேளை விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள் என்று சம்பந்தன் அவர்கள் கூறியிருப்பாராகவிருந்தால் தென்னிலங்கையில் பாரிய அரசியல் ரீதியான குழப்பங்கள் ஏற்பட்டிருக்கும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத்திட்டம் என்கின்ற கனவு இல்லாமல் போயிருக்கும். ஆகவே இதனை ஒரு இராஜதந்திர நகர்வு என்றே பார்க்கவேண்டும். தொடர் போராட்டம் என்பது எந்தவொரு நாட்டிலும் வெற்றியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. அதனோடு சமாந்தரமான பேச்சுக்களே தீர்வினைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது. போராட்டத்தினது வடிவங்கள் மாற்றியமைக்கப்படும் போது அரசியல் வடிவங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்காக அரசியல் வரலாறு தெரியாமல் அரசாங்கம் கொடுப்பதை மாத்திரம் பெற்றுவிட்டு வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள இயலாது.

ஏற்கனவே இராணுவப் புலனாய்வாளர்களுடனும், அரசுடனும் இணைந்து தமது செயல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த ஆயுதக்கட்சிகளும், தற்போது அரசுடன் இணைந்திருக்கும் ஆயுதக்கட்சிகளும் வெளியில் தம்மை இலங்கை அரசுக்கு எதிரானவர்கள் எனக்காட்டிக்கொண்டு பின் கதவு வழியால் அரசுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். இந்த நிலை மைகள் மாற்றப்பட வேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசிற்கு எதிரான நடவடிக்கைகளையே மேற்கொள்ள வேண்டும்.

**1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் வழியுறுத்துவதன் ஊடாக ஏனைய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளைக் காணமுடியும்.**
**2. சட்டத்தின் ஊடாகவும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது.**
**3. ஜனாதிபதியினது பொதுமன்னிப்பின் ஊடாக விடுதலை செய்யப்படுவதற்கான வழி வகைகள் இருக்கிறது.**

இவற்றைக் கையாள்வதில் தமிழ்க் கட்சிகள் தாமதிக்கின்றன என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அதற்காக நாம் அரசாங்கத்திற்கு விலைபோகும் அல்லது அரசாங்கத்திற்கு கைகொடுக்கும் செயற்பாடுகளை மறைமுகமாகச் செய்யக்கூடாது. மக்கள் புரட்சி என்பது எந்தவொரு நாட்டிலும் அது மாபெரும் சக்தியாகத்தான் திகழ்கிறது. தற்போது நடத்தப்படுகின்ற போராட்டங்களில் இவ்வாயுதக்கட்சிகள் தவிர்ந்து பொதுமக்கள் போராட்டக் களத்தில் நிற்பார்களாகவிருந்தால் அதற்கான பெறுபேறுகள் வேறு விதமாக அமையும். இவர்களின் உள்நுழைவு என்பது கடந்த காலத்திலும் சரி, தற்போதும் சரி தவறான வழியில் மக்களை திசைதிருப்ப முற்படுகிறார்கள். த.தே.கூட்டமைப்பு என்ற ஒற்றுமையை கோர முடியாது தத்தமது கட்சிகளுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் தவிர்ந்த ஏதேனுமொருப் போராட்டம் 2009ம் ஆண்டுக்குப் பின் இவர்களுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்திருக்கிறதா? இதே முகங்கள் தான் மீண்டும் போராடி வருகிறார்கள். எதற்கெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும் என்றில்லாமல் ஊரை அடித்து உலையில் போட்டவர்களும் இவ்வார்ப்பாட்டங்களில் கலந்துகொள்கிறார்கள் ஆயுதப் போராட்டங்களை கொச்சைப்படுத்தவில்லை. அவர்கள் எந்தநோக்கத்தோடு ஆயுதம் ஏந்திப்போராட புறப்பட்டார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்றவர்களாக, நம்பிக்கை மிக்கவர்களாக தொடர்ந்தும் செயற்பட வேண்டும். ஆயுதப்போராட்டக் கட்சிகளின் தலைவர்கள் இப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த போராளிகளை தெருவோரம் விட்டுவிட்டு தாம் அரசுடன் இணைந்து உல்லாச வாழ்வினை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இது கவலைக்குரிய விடயம். தமிழினத்தின் விடிவுக்காக இறுதிவரைப்போராடிய விடுதலைப்புலிகளுக்கு அரசியல் அரங்கில் ஒரு இடமேனும் கொடுப்பதற்கு த.தே.கூட்டமைப்பின் தலைமைகள் விரும்பவில்லை. காரணம். மீண்டும் அவர்கள் உருவாக்கப்பட்டால் தமது அரசியலின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பதே.

ஒற்றுமையே பலம் என்று கூறிக்கொள்ளும் இவ்வாயுதக்கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து வட-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும் ஒரே நோக்கில் செயற்படுவார்களாகவிருந்தால் மக்கள் உங்களை மன்னித்து மறந்து ஏற்றுக்கொள்வார்கள். நாம் இதுவரை காலமும் எதற்காகப்போராடினோம். அந்த இலட்சியத்தின் பால் அந்த சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் போது தான் எம் இனம் சந்தோசமடையும். அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளாமல் கட்சிகளுக்குள்ளேயே குழப்பங்களை விளைவித்து தமிழரசுகட்சியின் பின்னால் வால் பிடித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை. ஆயுதக்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் போராட்டங்களை முன்னெடுக்க முன்வரவேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமையை வென்றெடுக்க அனைவரும் முன்வரவேண்டும். நாங்கள் தேசிய வாதிகள் என்றும் எமது போராட்டம் எப்படிப்பட்டது என்றும் வீரவசனம் பேசுபவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடிப்பதன் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

**நெற்றிபொறியன்**



# பிராந்திய செய்திகள்



## சீமெந்தின் விலை மீண்டும் அதிகரிப்பு!

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து மூடையின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சீமெந்து மூடை ஒன்றின் விலை 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விலை உயர்வின் மூலம் சீமெந்து மூடை ஒன்றின் புதிய விலை ரூ.2350 ஆக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




## வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு: ஒரே நாளில் இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு

வவுனியா தவசிகுளம் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் ஒன்று பொலிசாரால் அன்று (31) மாலை மீட்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே நாளில் இரு ஆண்களின் சடலங்கள் வவுனியாவில் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. வவுனியா தவசிகுளம் பகுதியில் மனைவியும் அவருக்கு துணையாக பிள்ளையும் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றிருந்த நிலையில் குடும்ப தலைவர் மட்டும் வீட்டில் நின்றுள்ளார்.

மனைவியும் பிள்ளையும் வைத்தியசாலையில் இருந்து வீடு சென்ற போது குறித்த குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். பின்னர், மனைவியால் கிராம அலுவலருக்கு வழக்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற கிராம அலுவலர் மற்றும் பொலிசார் சடலத்தை பார்வையிட்டதுடன் பொலிசார் சடலத்தை மீட்டனர். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அப் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய மருதலிங்கம் நிமல்ராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இதேவேளை வவுனியா சிவபுரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் இருந்தும் 35 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் காலை மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டம் காரணமாக போக்குவரத்து பாதிப்பு

மதுரங்குளிய எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக புத்தளம் - சிலாபம் வீதி தடைப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வீதியை மறித்து எரிபொருள் கோரி கும்பல் ஒன்று இவ்வாறு எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்காரணமாக புத்தளம் - சிலாபம் வீதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதுடன், அதனை அண்மித்த பல வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மதுரங்குளிய பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## ஜனாதிபதி வீட்டின் முன் கலவரத்தில் ஈடுபட்ட 45 பேர் கைது

பெங்கிரிவத்தை வீதியில் அன்று(31.03) இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் உட்பட 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட கலவரத்தில் பொலிஸ் பஸ் ஒன்றும், ஜீப் ஒன்றும், முச்சக்கரவண்டி ஒன்றும் , 2 டிரா.ஃபிக் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இராணுவ பஸ் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டன.

சம்பவத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டால் தபால் சேவை பாதிப்பு

தொடரும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டால் இலங்கையின் தபால் சேவை கடுமையாக பாதித்துள்ளது. இந்நிலைமை காரணமாக கடிதங்களை விநியோகிப்பது சுமார் ஒரு நாள் தாமதமாகலாம் என பிரதி தபால்மா அதிபரான ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலை அடுத்த வாரம் வரை தொடரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடிதங்களை தெரிவு செய்தல் மற்றும் தபால் பைகளை செயலாக்கம் செய்யும் நடவடிக்கைகள் இரவிலும் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## உணவுப் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 30.2% ஆக உயர்வு

இலங்கையில் உணவுப் பணவீக்கம் கடந்த மாதத்தில் 30.2% வீதமாக உயர்ந்துள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அண்மைய அறிக்கையின்படி, உணவு அல்லாத பணவீக்கம் 13.4% ஆக உள்ளது.

மார்ச் மாதத்தில் ஆண்டு அடிப்படையில் பணவீக்கம் 18.7%ஆக உயர்ந்துள்ளது. இலங்கையில் உணவுப் பணவீக்கம் பெப்ரவரியில் 25.7% ஆகவும், உணவு அல்லாத பணவீக்கம் 10.1% ஆகவும் இருந்தது. உணவுப் பணவீக்கத்தின் படி, இலங்கை உலகில் 12ஆவது இடத்திலும், ஆசியாவில் 4ஆவது இடத்திலும், தெற்காசியாவில் 1ஆவது இடத்திலும் உள்ளது.

## எரிபொருள் பற்றாக்குறையால் நீண்ட தூர பஸ் போக்குவரத்து பாதிப்பு!

டீசல் தட்டுப்பாடு காரணமாக தொலைதூர பஸ் சேவை கடுமையாக பாதிக்கப்படும் என பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சாதாரண பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அனைத்து பஸ்களையும் அன்று(01.04) முதல் சேவைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து சபையின் தலைவரான கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டீசல் தட்டுப்பாடு காரணமாக அன்று(31) பாடசாலை மாணவர்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.



## ராஜபக்ஷவுக்கு எதிராக சமூக ஊடகங்களில் பொதுமக்களின் சீற்றம் அதிகரித்து வருகிறது!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக சமூக ஊடகங்களில் மக்கள் சீற்றம் வேகமாக அதிகரித்து வருகிறது. மின்வெட்டு, எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு தொடர்வதை அடுத்து, சமூக ஊடகங்களில் ராஜபக்சக்களுக்கு எதிரான கோபம் அதிகரித்து வருகிறது. சமூக ஊடக பயனர்கள், பல முக்கிய பிரமுகர்கள் உட்பட, தற்போதைய விடயங்கள் தொடர்பில் சமூக ஊடகங்களில் ராஜபக்ஷ நிர்வாகத்தை வெளிப்படையாக விமர்சித்துள்ளனர். இதேவேளை, அரசாங்கத்திற்கு எதிராக 'வெள்ளை துணி' பிரசாரம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பொது மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடரவுள்ளன.

நெலும் பொக்குண திரையரங்கிற்கு வெளியே வெள்ளைத் துணி பிரசாரம் ஆரம்பிக்கப்படுவதால் வாகனங்களின் பக்கவாட்டு கண்ணாடியில் வெள்ளைத் துணி கட்டப்படவுள்ளன. சனி(02) மாலை 5 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள இந்த பிரசாரம் எதிர்வரும் வாரத்தில் அதிகளவான வாகன ஓட்டிகள் பக்கவாட்டுக் கண்ணாடியில் வெள்ளைத் துணியைக் கட்டி எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் சங்கிலித் தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் மெழுகுவர்த்தி ஏந்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. புதன்கிழமை இரவு வாகன ஓட்டிகள் ராஜபக்ஷ நிர்வாகத்திற்கு எதிராக தங்கள் ஒலி எழுப்பிகளை ஒலிக்கச் செய்தனர். இதற்கிடையில், சில வணிக வளாகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் அவற்றின் மின்பிறப்பாக்கிகளை இயக்க எரிபொருள் தீர்ந்துவிட்டதால் அன்று(31) முழு இருளில் மூழ்கின.

## யாழில் SJB எதிர்ப்பு பேரணி..! ஜனாதிபதி ஆதரவாளர்களுடன் கைகலப்பு!

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் அன்றைய901.04) தினம் பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பேரணி யாழ் மாவட்ட செயலகத்தில் இருந்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்து இறுதி நேரத்தில் அங்கு ஜனாதிபதிக்கு ஆதரவாக ஒரு ஒரு குழு செயற்படவே அங்கு முறுகல் நிலை உருவானது.

முறுகல் நிலை ஏற்பட்டதுடன் கைகலப்பும் உருவானது. பதற்றத்தை தணிப்பதற்காக பொலிசார் குவிக்கப்பட்டு அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் கைகலப்பில் சிலர் காயமடைந்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் கட்சியினர் தொடர்ந்தும் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்ததுடன் குழப்பவாதிகளுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர். குழப்பத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் அங்கிருந்து பாதுகாப்பாக முச்சக்கர வண்டியில் அனுப்புவதற்கு முயற்சித்த வேளை போராட்டக்காரர்கள் முச்சக்கர வண்டியையும் கடுமையாகத் தாக்கினர். பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் பொலிஸாரே முச்சக்கர வண்டியை செலுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர, உமாச் சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்கள் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## அவசரகால நிலைமை பிரகடனம்



இலங்கையில் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வெளியிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.



# சினிமா துளிகள்



## விஜய்யுடன் இணையும் பிரபல இந்தி நடிகை



விஜய் நடிப்பில் தற்போது உருவாகிவரும் திரைப்படம் பீஸ்ட். இப்படத்தை கோலமாவு கோகிலா, டாக்டர் போன்ற படங்களை இயக்கிய நெல்சன் திலீப்குமார் இயக்கிவருகிறார். இதில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். அனிருத் இசையமைக்கும் இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. விறுவிறுப்பாக இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடந்து வருகிறது. பீஸ்ட் திரைப்படம் ஏப்ரல் மாதம் 13-ஆம் திகதி திரையரங்கில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தை தொடர்ந்து தோழா உள்ளிட்ட படங்களை இயக்கிய வம்சி பைடிப்பள்ளி இயக்கும் படத்தில் நடிகர் விஜய் நடிக்கவுள்ளார். 'தளபதி 66' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் நேரடியாக வெளியாக உள்ளது. இப்படத்தைப் பிரபல தயாரிப்பாளர் தில் ராஜீ தயாரிக்கவுள்ளார். இதில் நடிக்கவுள்ள நடிகை குறித்த எதிர்ப்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்திருந்தது.இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக 'ராஷ்மிகா மந்தனா' நடிக்க இருப்பதாக சமீபத்தில் தகவல் வெளிவந்தது. பிறகு தமன்னா நடிப்பதாக கூறப்பட்டது.

இந்நிலையில் இப்படத்தில் நடிக்க பிரபல இந்தி நடிகை 'கிரித்தி சனோன்' கதாநாயகியாக நடிக்கவுள்ளார் என கூறப்படுகிறது. இவர் இதற்குமுன் இந்தியில் வெளியான ஹவுஸ்ஃபுல்4, பரேலி கி பர்ஃபி, போன்ற படங்களில் நடித்து நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

## தனது காதலன் மற்றும் முதல் முத்தம் குறித்து பேசிய லாஸ்லியா



பிக் பாஸ் சீசன் 3யில் போட்டியாளராக கலந்து கொண்டதன், மூலம் தமிழ் ரசிகர்கள் மத்தியில் அறிமுகமானார் லாஸ்லியா.

பிக் பாஸ் நிகழ்ச்சிக்கு பின், ரசிகர்கள் மத்தியில் பிரபலமான இவர், Friendship எனும் படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் கதாநாயகியாகவும் என்ட்ரி கொடுத்தார்.

இதன்பின் தற்போது தனது பிக் பாஸ் நண்பர் தர்ஷனுடன் இணைந்து கூகுள் குட்டப்பா படத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், நடிகை லாஸ்லியா முதல் முறையாக தனது ரிலேஷன்ஷிப் மற்றும் முதல் முத்தம் குறித்து ஓப்பனாக பேசியுள்ளார்.

இதில் " என் முதல் காதல் பள்ளியில் தான் ஏற்பட்டது. அதுவும் ஒருதலை காதல் தான். அந்த பையனுக்கு இப்போது திருமணம் கூட ஆகிவிட்டது. என்னுடைய முதல் முத்தம் நான் ஒருவருடன் ரிலேஷன் ஷிப் இருந்த போது அவன் எனக்கு முத்தம் கொடுத்தான் " என்று தனது சொந்த வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்துகொண்டுள்ளார்.

## அழகான பொருளை நடிகை சமந்தாவிற்கு பரிசளித்த நயன்தாரா

நடிகைகள் தோழிகளாக இருப்பது அதிசயம், அதிலும் முன்னணி நாயகிகள் அப்படி இருப்பது ஆரோக்கியமான விஷயம் தான்.



சமந்தா-நயன்தாரா

தமிழ்-தெலுங்கு சினிமாவில் முன்னணி நாயகிகளாக இருக்கும் சமந்தா மற்றும் நயன்தாரா இருவரும் இப்போதெல்லாம் மிகவும் நெருக்கமாக இருக்கிறார்கள். காரணம் அவர்கள் ஒன்றாக நடித்த காத்து வாக்குல ரெண்டு காதல் படம் தான்.

விக்னேஷ் சிவன் இயக்க விஜய் சேதுபதி நாயகனாக நடிக்கும் இப்படத்தில் இவர்கள் இருவரும் தான் நாயகிகள். படத்தின் போஸ்டர் எல்லாம் வெளியாகிவிட்டது, படத்தின் படப்பிடிப்பும் அண்மையில் முழுவதும் முடிந்திருக்கிறது.




இப்படத்தில் பணிபுரிந்ததில் இருந்து சமந்தா-நயன்தாரா இருவரும் ஆரோக்கியமான நட்பை பாராட்டி வருகிறார்கள்.

நயன்தாராவின் பரிசு

இந்த நிலையில் நடிகை சமந்தாவிற்கு, நயன்தாரா ஒரு அழகான காதணியை பரிசாக கொடுத்துள்ளார். அதை நடிகை சமந்தா இன்ஸ்டாவில் ஷேர் செய்து நயன்தாராவிற்கு நன்றி கூறியுள்ளார்.

படப்பிடிப்பு முடிந்ததால் சமந்தாவிற்கு, நயன்தாரா இந்த பரிசு கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது

## பாகுபலி 1 பட வசூலை முழுவதும் முறியடித்துள்ள RRR படம்

எஸ்.எஸ்.ராஜமௌலி பிரம்மாண்ட படங்களை இயக்குவதில் வல்லவர். தனது அப்பா விஜயேந்திர பிரசாத் கதை எழுதி தர அதை பிரம்மாண்ட படமாக எடுத்து சாதனை செய்கிறார்.

அப்படி அவர் இயக்கிய படங்களில் ரசிகர்கள் பிரம்மிப்பாக பார்த்தது பாகுபலி 1 மற்றும் RRR திரைப்படம்.

பாகுபலி 1 மற்றும் RRR

பாகுபலி படம் ஒரு சாதாரண கதை தான். ஆனால் அதை பிரம்மாண்டமாக இயக்கி, மக்கள் அசந்து பார்க்கும் வகையில் சில விஷயங்களை படத்தில் வைத்து மக்களை ஈர்த்தவர் ராஜமௌலி.

பிரபாஸ், ராணா, தமன்னா, அனுஷ்கா, சத்யராஜ், நாசர் என பெரிய நடிகர்கள் பட்டாளமே நடித்துள்ளார்கள். 180 கோடி பட்ஜெட்டில் தயாரான இப்படம் உலகம் முழுவதும் ரூ. 650 கோடி வரை வசூல் சாதகை செய்தது.

அதேபோல் இப்போது ராஜமௌலி இயக்கிய RRR திரைப்படம் வசூல் வேட்டை நடத்தி வருகிறது. 300ல் இருந்து 350 கோடி வரை படத்தின் பட்ஜெட் என கூறப்படுகிறது.

பாகுபலியை முந்திய RRR

கடந்த மார்ச் 24ம் திகதி வெளியான RRR திரைப்படம் செம வசூல் வேட்டை நடத்தி வருகிறார். இதுவரை உலகம் முழுவதும் ரூ. 650 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாம்.

இதன்மூலம் பாகுபலி 1 பட சாதனையை முறியடித்துள்ளது RRR திரைப்படம்.






## ஜீ தமிழின் ஹிட் சீரியல் செம்பருத்தி முடிவுக்கு வருகிறதா?

ஜீ தமிழில் 2017ம் வருடத்தில் இருந்து ஒளிபரப்பாகி வரும் தொடர் செம்பருத்தி. நாராயணன்-தர்மலிங்கம் ஆகியோர் கதை எழுத தொடர் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

சீரியலின் பயணம்

கார்த்திக்-ஷபானா இருவரும் சீரியல் ஆரம்பத்தில் இருந்து ஜோடியாக நடிக்க இவர்களது கெமிஸ்ட்ரி ரசிகர்களால் பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வந்தது. பின் சில வருடங்களுக்கு முன் கார்த்தி தொடரில் இருந்து வெளியேற அக்னி என்பவர் தொடரில் முக்கிய வேடத்தில் நடிக்க தொடங்கினார்.

மற்றபடி பெரிய கதாபாத்திர நடிகர்கள் மாற்றம் எதுவும் நடக்கவில்லை.

ஒரே சீசனாக 1258 எபிசோடுகள் ஓடியுள்ளது.

அடுத்து நடக்கப்போவது என்ன?

தொடர் இடையில் சில டல்லான கதைக்களம் அமைய ரசிகர்கள் அய்யோ தொடரை முடித்துவிடலாமே என புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள். கொரோனா நேரத்தில் கூட தொடர் இடைவிடாமல் நடத்தப்பட்டு வந்தது.

இப்போது சீரியல் குறித்து என்ன விஷயம் என்றால் விரைவில் இந்த தொடர் முடிவுக்கு வர இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

ஆனால் அதிகாரப்பூர்வமாக எந்த தகவலும் வரவில்லை.

# மலராத மொட்டு



இது மிஷின் யுகம் புதுமையைக் கண்டு மயங்கி வாழ்க்கையை வீணடிக்கும் நவீன யுகம். அவள் அன்று ஒரு முழுநீள பெயர்கொண்ட - சினிமாக்காரர்களுக்கும் நாடககாரர்களுக்கும் தான் வாயில் நுழையாத பெயர் வைக்க நன்றாகத் தெரியுமே - சினிமா படங்களுடன் பொழுதைக் கழித்திருக்க வேண்டும் போல ஏனெனில், அதன் மாற்று வடிவமே இன்றைய தொலைக்காட்சி தொடர் நாடகங்கள்.

எப்போதும் அவன் பாடசாலையிலிருந்து மதியம் இரண்டு முப்பது மணியளவில் வீடு வருவது வழக்கம் அன்று தமிழ்ப் பாடசெயலமர்வு நடைபெற்றதால், இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகவே வந்தான்.

உள்ளே எப்பொழுதும் போல கதையில் தொடர் நாடகங்களின் அட்டகாசம். அவனது மகள் நிலத்தில் விளையாடுகின்றாள். வழமை போல அமளிதுமளி எழுந்தது. அடுப்பறைக்குள் போவதும் வருவதும் இருக்கைகளில் அமர்வதும் தன்னை அறியாமல் சிரிப்பதும் விழிகளின் பார்வை தொலைக்காட்சியில் கரங்கள் சோற்றுக் கோப்பைக்கும் வாய்க்கும் இடையில் வீதி மறியல் போராட்டம்.

"உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான் கொஞ்ச நேரமாவது சும்மா இருக்க மாட்டாய்" அங்களாய்த்தவாறு சோற்றுக் கோப்பையை அருகில் இருந்த அரைச் சுவரில் வைத்து விட்டு பார்வையை மாற்றாமல் இரண்டு கரங்களினாலும் குழந்தையைத் தூக்குகின்றார், அவனது மாமியார். குழந்தை தொலைக்காட்சித் தொடர் நாடகமே வேண்டாம் என்பது போல அவளைப் பரிதாபமாகப் பார்க்கின்றது. அவன் குழந்தையைப் பார்த்து மென்மையான மௌன புன்னகையை புன்னகித்து விட்டு, அறைக்குள் நுழைகின்றான்.

இஞ்ச உங்களுக்குச் சாப்பாடு மேசையில் போட்டு வச்சிருக்கன். அதை எடுத்துச் சாப்பிட்டுட்டு கோப்பையை உள் 'சிங்' இல் கழுவ வேணாம். வெளியில் கழுவுங்க இண்டைக்கு விரதம் குசினி கழுவப் போறம். நாங்க மச்சம் இல்ல. உங்களுக்கு மட்டுந்தான் முட்டை பொரித்தது. இப்ப நான், புள்ளைய முழுக வாக்கப் போறன்." கைகளில் சோற்றுக் கோப்பையுடன் தொலைக்காட்சியை நோட்டமிட்டவாறு கதிரையில் அமர்கின்றாள், அவனது மனைவி.

"அம்மா, அவனுக்கு கல்யாணம் நடந்து முதலிரவு நடந்திடுச்சா"

"சும்மா சத்தம் போடாம பாரு நானும் உன்னோட தானே நேற்றுப் பார்த்தனான். இப்பதான் முதற்கட்டம் அவன்ர தம்பிக்குக் கல்யாணம் நடந்திச்சு. இந்த புள்ள ஒழுங்கா பார்க்க விட்டால் தானே?"

குழந்தையைக் கீழே வைக்க எத்தனிக்கும் போது, குழந்தை தொலைக்காட்சியின் சப்தத்தினால், வீரிட்டு அழுதது. அவன் தனது உடைகளை மாற்றாமல் குழந்தையைத் தூக்கச்சென்றான். அப்போது அவனது மனைவி குறுக்கிட்டாள்.

"றோட்டாலே சுத்தித்திரிந்து போட்டு பிள்ளையைத்தூக்க வேண்டாம். என்ர பிள்ளைக்குக் கௌரவம்தான் முக்கியம் உங்கள மாதிரி குளிக்காத கொள்ளாத வேடர் போல என்ர பிள்ளையையும் நினைச்சிட்டிங்களா?"

அவள் பேசியதில் இருந்து தொலைக்காட்சி நாடகங்களின் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. நாடகத்தில் வினோதினி என்ற பாத்திரம் தனது கணவனின் பொறுப்பற்ற செயலை, "உங்களுக்கு இப்ப ஊர் ஊர் ஊரா சுத்துறதுதான் பழக்கம்" திட்டினாள்.

யதார்த்தமாக வாழ்ந்த கணவனும் "உனக்கு இப்ப என்ன வேணும்" பதிலுக்குப் எகிறி குதித்தான். அவனது மனைவியும் மாமியும் வைத்த கண் வாங்காமல் அந்த நாடக உரையாடலில் மூழ்கிப் போயிருந்தனர்.

t.v. தொடர்ந்து பார்த்தால், ஆயுள் குறையுது கண்பார்வை குறையுது வாழ்க்கையில் விரக்தி ஏற்படுகின்றது சிறுவர்கள் தவறான வழியில் செல்கிறார்கள் குடும்பப் பிரிவு ஏற்படுகின்றது உறவினர்களிடையே உள்ள அன்னியோன்னியம் குறைவடைகின்றது. குழந்தைகளின் மூளைச் ஷெல்கள் பாதிப்படைகின்றன. மாணவர்களின் எழுத்தாற்றல் குறைவடைகின்றது. அவர்களுக்கு மந்த புத்தி ஏற்படுகின்றது. ஆண்கள் மதுவிற்கும் பெண்கள் வீண் பொழுதுபோக்கிற்கும் அடிமையாகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் லீவு நாட்களில் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதால், விடுமுறை நிறைவு பெற்று மீண்டும் பாடசாலை செல்லும் போது உதாசீன தன்மை ஏற்படுகின்றது. சரியான உறக்கமில்லாமல் தொலைக்காட்சி நாடகங்களைப்பார்ப்பதால், அடிக்கடி கோபம், ஞாபக மறதி என்பன ஏற்படுகின்றன பெற்றோர் தொலைக்காட்சி நாடகத்தில் கூடிய நேரத்தை செலவழிப்பதால் பிள்ளைகள் அன்பு இல்லாமல் பரிதவிக்கின்றார்கள் முதியவர்கள் தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சியைத் தினமும் பார்த்துக்கொண்டிருப்பதால், அவர்களின் இதயம் பாதிப்படைவதுடன், அதிகாலையில் துயில் எழவும் சங்கடப்படுகின்றனர் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். என்றெல்லாம்எப்பொழுதோஅவன்மேடையில் பேசிய நினைவுகள் நிழலாடுகின்றன. மெதுவாக நினைவுகளிலிருந்து விடுதலையாகி,

"இந்த வீட்டில் என்றைக்காவது ஒரு நாள் இந்த தொலைக்காட்சி நாடகத்தினாலே ஏதோ நடக்கப் போகுது. எனக்குச் சாப்பாடும் வேணாம் ஒன்றும் வேணாம் நான் கடையில் சாப்பிடுகின்றன் வீட்டில் எந்த நேரமும் நாடகம் தான்" புறுபுறுத்தவாறு மோட்டார் சைக்கிளில் ஏறி பதற்றத்துடன், ஐமனைத் தேடிப் புறப்பட்டவன் போல பறந்து சென்றான். மனைவியையும் மாமியையும் நினைக்கும் போது அவனுக்கு நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சாந்தம் என்ற நவ ரசனைகளும் ஒருங்கே தோன்றுகின்றன. ஒரு மனிதன் சவால்களின் போது வெளிக்காட்டும் பிரதிபலிப்பே மன அழுத்தம். இன்று இவ்வாறான மன அழுத்தங்களினால், எத்தனையோ அகால மரணங்கள் நிறைவேறியிருக்கின்றன எத்தனையோ பிஞ்சு உள்ளங்கள் அந்தரத்தில் பரிதவிக்கின்றன. இன்றைய உலகம் அடிப்படைத்தேவை, அத்தியாவசியத் தேவை, பொதுத்தேவை, பரம்பரைத்தேவை, ஆடம்பரத்தேவை என்ற அடிப்படையில் வாழாமல் ஆடம்பரத் தேவையை முதன்மை படுத்தி வாழ்வதால், மனிதன் எதற்காக சாகின்றோம் என்று தெரியாமல் சாகின்றான்?.

சிரிப்புச் சப்தம் ஓயவில்லை. கணவனைத் துடைப்பம் கட்டையால் அடிக்கும் காட்சியில் இருவரும் ஊறித் திளைத்துப் போய் நின்றார்கள். t.v.க்கும் அவர்களுக்கும் இடையில் இருந்த குழந்தை, t.v. யின் மீதும் இவர்கள் மீதும் வெறுப்புக் கொண்டதைப் போல கண்ணயர்ந்து ஆழ்ந்த உறக்கமாகிவிட்டது.

"அம்மா…அம்மா…அம்மா…அம்மா…" மதிபனின் குரல் சிட்டுக்குருவி கீச்சீடும் ஒலி போன்று படலையடியில் ஒலிக்கின்றது. வீதியால் சென்றவர்கள் எமக்கு ஏன் வீண் வேளை என்று எண்ணி கண்டும் காணாத மாதிரி சென்றார்கள்.

வெளியில் ஆளில்லாமல், "உள்ளே வாடா கொலசிப் எக்சாம் றிசேல்ஸ் வந்திருச்சா. கொண்டு வா பார்ப்பம் நீ பாஸ் பண்ணி விட்டாயா?" அம்மம்மாவின் அரவம் மட்டுமே சிறுவனின் காதுகளில் அரைகுறையாக விழுந்தது.

"அம்மா…அம்மா…அம்மா…அம்மா..அம்மா… அம்மா…ஆ…கெதியா…வாங் கோ"

t.v.யின் சப்தம் கூடுகின்றது. "நீ இப்படி ஏழையாக இருந்தா முதல்ல சொல்லியிருக்க வேண்டியது தானே என்ர வாழ்க்கையை வீணாக்கிப் போட்டாய். நான் எப்படி இருந்தனே!!!? அப்படியே விட்டுவிட்டு என்கிட்ட வாங்கின காசையும் என்ர அம்மாகிட்ட வாங்கின காசையும் பொருட்களையும் தந்துவிட்டு, எனக்கும் நஷ்ட ஈடு தந்துட்டு. உன்ர பாட்டுக்கு போ. இல்லாட்டி நான் நல்ல லோயரிட்ட போய் உனக்கெதிரா, கொடுமைக்கார குடிகார புருஷன் என்று டைவோஸ்சுக்கு வழக்குப் போடுவன்" வினோதினி தொலைக்காட்சித் திரையில் பேய்த்தாண்டவம் ஆடுகின்றாள்.

'அதுதான் சரியான பெண்' பக்க வாத்தியம் பாடினாள், அவனது மாமி.

"டேய் நீ செய்யிறதை செய் நான், என்ன பொய்யா சொல்லிப்போட்டன்?, உன்ர அம்மாவும் நீயும் கதைத்த கதை கொஞ்சமா?. என்னை என்ன மடையன் என்று, நினைத்துக் கொண்டாயா?. மனிதனை முதல்ல மனிதனாய் மதிக்க வேண்டும்"

'நீங்கள் அனைவரும் கேட்டு வாங்க வேண்டிய சோப் மேனி மினுமினுக்க பாவிக்க வேண்டிய சோப் சந்தன சோப்' விளம்பரத்தோடு, தொலைக்காட்சியின் திரையில் எழுத்தில் விழுகின்றது விளம்பர இடைவேளைக்குப் பிறகு வசந்தம் தொடரும் என்று.

மாமியார் எழுந்து குசினிக்குள் சென்றார். அவனது மனைவி சாப்பாட்டுக் கோப்பையைக் கழுவுவதற்கு வெளியே வந்தாள்.

வீட்டுப் படலையடியில் சனக்கூட்டம் கூட்டத்தின் மத்தியில் எதிர்காலக் கனவுகளுடன் உயிருக்குப் போராடுகின்றான், மதிபன்.

அங்கு வந்த ஆடவர்கள் சிலர் படலையிலிருந்த விசப்பாம்பை அடித்து இழுக்கின்றனர்.

அவனது மனைவி மதிபனை நோக்கி ஓடினாள். சிறுவனின் வலக்கரத்தில் கிடந்த கடதாசியை எடுத்து விரித்துப் பார்த்தாள். அவளின் கண்ணீர்த்துளிகளினால், மகனின் முகமும் கடதாசியும் நனைகின்றன தாயிடம் ஏதோ சொல்ல எத்தனிக்கின்றான் அவனால் முடியவில்லை. நூற்றியைம்பது புள்ளிகளைப் பெற்று புலமைப் பரீட்சையில் மதிபன் சித்தியடைந்துள்ளான். என ஆசிரியரின் கையெழுத்துடன் கடிதம் பதில் நல்கியது.

"அம்மா…அம்மா…அம்மா…"

அம்புலன்ஸ் வண்டி விரைந்து வந்தது. சனக்கூட்டம் கலைந்தது. மேகக் கூட்டங்கள் ஓடின. அவரவர் தங்கள் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

கோபத்துடன் சென்ற அவன் கோபம் தணியவே வீடு நோக்கி வருகின்றான்.

'வசந்தம் தொடரும்…' தொலைக்காட்சியின் சப்தம் அவனது காதுகளைத் துளைக்கின்றது. அதைப் பார்ப்பதற்கு அங்கு எவருமில்லை.

அவனது, மகள் விழித்து வாஞ்சையுடன் அவனைப் பர்க்கின்றாள். அங்கே இருவரைத் தவிர தற்காலிகமாக எந்த மனிதனும் இல்லை.


அவன் பற்றுடன் தனது மகளை இரு கரங்களாலும் பற்றி கட்டி அணைக்கின்றான். அப்போது அவனது சட்டைப்பைக்குள் இருந்த கைத்தொலைப்பேசி அலறுகின்றது. தொலைக்காட்சியின் சப்ததினால், அலறும் சப்தம் வெளிவரவில்லை.

"மகளே, இப்ப அண்ணா பாடசாலையில் இருந்து வந்திருவான். நீ அவனோட விளையாடலாம். நீயும் அவன மாதிரி நல்லா படிக்கணும்" மகள் மெல்லிய உதடுகளினால், புன்னகித்தாள். அவன் கைகளில் மகளுடன் படலையை நோக்கி நகர்கின்றான். முற்றத்தில் நின்ற தென்னை தருவிலிருந்து அவர்கள் அருகில் ஒரு தேங்காய் விழுகின்றது. பிள்ளை திடுக்கிடுகின்றது தந்தையை இறுகப் பற்றுகின்றது. அவனது மனம் வலுப்பெறுகின்றது.

படலையின் முன்னால், 'வைற்கவுஸ் கார்' நிற்கின்றது.

காரைக் கண்டதும் தன்னை மறந்து, "எ… கே…எ…கே…எ…" பிள்ளை சிரிக்கின்றது.

முற்றும்



**யுயல்நேஷன்,**
**தலைவர்,**
**புதுமை எழுத்தாளர் ஒன்றியம்.**
**இலங்கை.**

# முன்னாள் போராளிகள் என்ற சொற்பதம் மாற்றப்படவேண்டும் – இது தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட இலட்சியத்தை கொச்சைப்படுத்தும் ஒரு செயல்



30 வருட காலங்களுக்கு மேல் தமிழ் மக்களுக்கானப் போராட்டம் நகர்த்தப்பட்ட நிலையில் ஆரம்பகட்ட இயக்கங்களான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்கள் ஒரே கொள்கையுடன் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் போரிட்டது. அதற்கான ஆயுத உதவி, பயிற்சிகள் அனைத்தும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. துரதிஷ்டவசமாக விடுதலைப்புலிகளினால் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட போடா தடைச்சட்டத்தின் கீழ் இந்தியாவில் ஆயுதக்குழுக்கள் தடைசெய்யப்பட்டது.

அதனையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கடல், வான், தரை என முப்படைகளையும் கொண்டதொரு இயக்கமாகவும், நிர்வாகக் கட்டமைப்புக்களையுடைய ஒரு இயக்கமாகவும் சர்வதேச அளவில் திகழ்கிறது. ரெலோ, புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி போன்ற இயக்கங்கள் முன்னாள் போராளிகள் என்றோ, ஜனநாயகப் போராளிகள் என்றோ தமது இயக்கத்திற்கு முன்னாள் ஒரு அடைமொழியினைப் போட்டுக்கொள்ளவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிரிவுகள் தற்போது உருவாகியுள்ளது. அரசாங்கத்தின் சதித்திட்டத்தில் விடுதலைப்புலிகளது அமைப்பை துண்டுதுண்டாக சீர்குலைப்பது என்பதேயாகும். அதற்குத் துணைபோனவர்களாகவே தற்போது இலங்கையில் இயங்கக்கூடிய விடுதலைப்புலிகளின் பெயரை வைத்து அதற்கு முன்னாள் போராளிகள், முன்னாள் விடுதலைப்புலிகள் என்றெல்லாம் கூறிக்கொண்டு இராணுவப்புலனாய்வின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்பவே இவர்களது செயற்பாடுகள் அமையப்பெறுகிறது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச அமைப்பாகிய நாடு கடந்த தமிழீழ அரசுக்கு இந்நாட்டில் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சர்வதேச ரீதியாக பலம் பொருந்திய அமைப்பாக தேசியத் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகத் திகழ்கிறார்கள். வடகிழக்கில் நாடு கடந்த தமிழீழ அரசு தமது அரசியல் பணிகளைச் செய்வதற்கு இலங்கையரசு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாகவிருந்தால் 24 மணி நேரத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கான அரசியல் பணிகளைத் தொடர்வதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

சமாதான காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகமானது வடகிழக்கில் இயங்கி வந்தது. இவர்களது அரசியல் முன்னெடுப்புக்கள் சிறந்ததொரு முறையில் பயணித்துக்கொண்டிருக்கும் போதுதான் அதனைப் பொறுக்கமுடியாத சிங்கள தேசம் மாவிலாறில் தண்ணீர்ப் பிரச்சினையைக் காரணங்காட்டி விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க வேண்டுமென்று பன்னாட்டு உதவிகளுடன் தமது இராஜதந்திர அரசியல் நகர்வுகளை நடாத்தி முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளின் போர் நடவடிக்கைகள் மௌனிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

விடுதலைப்புலிகளின் போராட்ட வடிவம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து 11000 போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். 200க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டமைப்புக்களில் இருந்த போராளிகள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இதில் தளபதிகளும் அடங்குவர். விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த எந்தவொரு நபரும் தன்னை முன்னாள் போராளி என்று அடையாளப்படுத்தவேண்டிய தேவை இல்லை. குறித்த சொற்பதம் தவறானது. முன்னாள் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல். எப் என்று யாராவது கூறுகின்றார்களா? இவர்கள் விடுதலைப்புலிகளது போராட்டத்தையும் அவர்களுடைய சிறந்த பண்புகளையும் சர்வதேச ரீதியாக குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உள்ளவர்களை இலங்கை அரசாங்கம் திறந்த வெளியில் தமது செயற்பாடுகளைச் செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் தினம் என தற்போது அனுஷ்டிப்பதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கியிருந்தது. இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தை எந்த சட்டத்தின் கீழ் இவற்றினைச் செய்ய இலங்கை அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்கிற கேள்வியும் எழுப்பப்படும் இவ்வேளை விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியானது செயற்படுவதற்கான அனுமதியை அரசாங்கம் ஏன் வழங்கக்கூடாது. அவ்வாறு வழங்குவதன் ஊடாக இந்த முன்னாள் போராளிகள் என்கிற சொற்பதம் இல்லாமல் போகும்.

முன்னாள் போராளிகள் எனச் சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியொன்றை உருவாக்கி அதனை நடைமுறையில் கொண்டுவரவேண்டும். முதலில் விடுதலைப்புலிகளுடைய போராளிகளுக்கு ஒற்றுமை அவசியம். அதற்கான ஒரு தனிச் செயலனியை உருவாக்கிச் செயற்படுவதன் ஊடாகவே விடுதலைப்புலிகளது அரசியல் கட்டமைப்பை தொடர்ந்தும் இந்நாட்டில் தக்கவைத்துக்கொள்ளமுடியும்.

விடுதலைப்புலிகளது அரசியல், ஆயுதக் கட்டமைப்பும் சரியான பாதையில் இயங்கிக்கொண்டிருந்த போது போனஸ் அடங்கலாக 22 பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்று பெரும் கட்டமைப்பினை விடுதலைப்புலிகள் வைத்திருந்தனர். போர் மௌனிக்கப்பட்டாலும் விடுதலைப்புலிகள் ரீதியான நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டிய தேவை போராளிகள், விடுதலைப்புலிகள் அமைப்பில் அங்கம் வகித்த ஒவ்வொரு போராளியினதும் கடமையாகும். இவ்வாறு ஏன் இந்த போராளிகள் சிந்திக்கவில்லை. இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயம். விடுதலைப்புலிகளுடைய விசேட வேவு அணி, அரசியல் துறைப் பொறுப்பாளர்கள், விடுதலைப்புலிகளின் 58 கட்டமைப்புக்களில் பணியாற்றியவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் விடுதலைப்புலிகளது அரசியல் அமைப்பு என்று இயங்குவது சாலச் சிறந்தது. இவர்களுக்கு முன்னாள் போராளிகள் என்ற சொற்பதத்தைப் பயன்படுத்துவது பாரதூரமான முடிவைச் சந்திக்கும் செயற்பாடாகும்.

தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளைப் பொறுத்தவரை வடகிழக்கு இணைந்து சுயாட்சியை அமுல்படுத்த வேண்டும் என்பதே. அதற்கான ஒத்துழைப்புக்களை குறித்த போராளிகள் வழங்கவேண்டும். தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் முன்னாள் போராளிகள் தொடர்பாக அனைத்து ஆதாரங்களும் இருக்கின்றன. இவர்கள் யாருடைய நிகழ்ச்சிநிரலின் கீழ் செயற்படுகின்றார்கள் என்பது வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது. போராளிகளே போராளிகளுக்குள் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு செயற்படுவதன் ஊடாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் பலம் பெரும் நிலைமைகளே உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளது போராட்ட கட்டமைப்பு இருந்த காலகட்டத்தில் அரசாங்கம் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்தது. அந்த நெருக்கடிகள் தற்போது முற்றாக அற்றுப்போயுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினையும் இவ்வரசாங்கம் வழங்குவதற்குத் தயாராக இல்லை. ஆயுத பலத்தை மீண்டும் கொண்டுவரவேண்டிய தேவை குறித்த போராளிகளுக்கு இருக்கிறது. தமிழ் மக்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாததன் காரணமாகவும் 1983 ஜூலைக் கலவரம் உருவாக்கப்பட்டது. மீண்டும் ஒரு கலவரத்திற்கே இவ் நல்லாட்சி அரசாங்கம் வழி வகுத்துச் செல்கின்றது எனலாம்.

மீளவும் விடுதலைப்புலிகளின் போராட்டம் உருவாகக்கூடாது என்பதில் அரசு முனைப்பாகச் செயற்படுகின்றது. ஏற்கனவே அரசில் அடிவருடிகளாகச் செயற்பட்டு வந்த ரெலோ, புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களை அரசு தனது பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது. இவர்களால் அரசாங்கம் ஒரு போதும் பயப்படப்போவதில்லை மாறாக விடுதலைப்புலிகள் என்ற கட்டமைப்பு மீண்டும் தமக்கு எதிராக ஆயுதம் ஏந்திப்போராடினால் அதனோடு வருகின்ற தாக்கங்களை ஜீரணிக்க முடியாது போகும் என்ற காரணத்தினாலேயே விடுதலைப்புலிகளது அமைப்பை அவர்களுடைய பேச்சுக்களை அவர்களது செயற்பாடுகளை போர் இடம்பெற்றது என்ற அடையாளமே இல்லாத வகையில் முடக்குவதற்கான அனைத்து செயற்பாடுகளும் அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே முன்னாள் போராளிகள் என்ற சொற்பதங்கள் பிரயோகிக்கப்பட்டு பலர் முகநூல் ஊடாகவும், இணையத்தளங்கள் ஊடாகவும் அரசினால் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இதனை தமிழ் மக்களாகிய நாம் புரிந்துகொள்ள வேண்டும். போராட்டம் பற்றிய வரலாறு தெரியாதவர்களே இன்று முகப்புத்தகம் வழியாக போராட்டம் பற்றிப் பேசுகின்றனர். தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த காலகட்டங்களில் முகப்புத்தகம் ஊடாக தமிழர் போராட்டங்களைத் திசைதிருப்பும் நோக்கில் அரசு தீவிரமாக செயற்படுகிறது.

காலத்திற்குக்காலம் விடுதலைப்போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்ட வரலாறு ஒரு பக்கம் இருக்க தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பெற்றுத்தரப்படாது போனால் மீண்டும் தமிழினம் சிந்தித்துச் செயற்படவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படும். அது அரசியல் போராட்டமாகவும் அல்லது ஆயுதப்போராட்டமாகவும் அமையலாம்.

நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாடுகள் இலங்கை அரசினால் முடக்கப்பட்டுள்ள நிலையில் முன்னாள் போராளிகள் என்று விடுதலைப்புலிகளின் பெயரை வைத்து உருவாக்கப்படுகின்றஒவ்வொருகட்சிகளும் தமிழினத்திற்கு மீண்டும் மீண்டும் துரோகத்தினை ஏற்படுத்தும் என்பதை மறந்துவிடாதீர்கள். இருக்கக்கூடிய தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பலப்படுத்தி அதனது தவறுகளை உணரும் பட்சத்தில் அவர்களை சீர்திருத்தி கொண்டு செல்லும் நடவடிக்கைகளுக்காக செயற்படுங்கள். இருக்கக்கூடிய அதிகாரம் கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடாக கொண்டு செல்ல முடியாதது ஏன் என்பது ஆராயப்பட வேண்டும்.

புதிதாக அமைப்புக்கள், கட்சிகள் உருவாகி எந்த காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் கிடைக்கப்போகிறது. அவர்கள் தமது கட்சியைப் பலப்படுத்த பல வருடங்கள் எடுக்கும். அதற்குள் எம் நாட்டில் போராட்டம் இடம்பெற்றதா என்று அடுத்த தலைமுறைகளுக்குக் கூட தெரியாமல் போய்விடும். ஆகவே குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எந்தவொரு பிரச்சினையும் நீண்ட தூரம் செல்லுமாகவிருந்தால் அது தோல்வியில் முடிந்ததே வரலாறு. ஆகவே முன்னாள் போராளிகள், ஜனநாயக போராளிகள், மக்கள் புலிகள் கட்சி என்றெல்லாம் பெயர் வைத்து மக்கள் மத்தியில் பிரபல்யம் தேட முயற்சிக்கவேண்டாம். இக்கட்டுரையின் நோக்கம் தமிழினம் ஒரு குடையின் கீழ் நின்று தமிழினத்தின் விடிவினை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே. இக்கட்டுரையினை வாசித்த பின் நீங்கள் உங்கள் மனச்சாட்சிக்கு சரியாக செயற்படுகிறீர்களா என்பது பற்றி சிந்தியுங்கள்.

**இரணியன்**



# பல்சுவை கதம்பம்



## கோடைக்காலத்தில் சருமத்தை பராமரிக்க சில எளிய டிப்ஸ் !!

வெயில் காலத்தில் சருமத்தில் நீர்த்தன்மை இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கோடைகாலத்தில் அதிக நீரை பருகுவது மிகவும் முக்கியமானது ஒன்றாகும். வெயிலில் செல்வதால் அலர்ஜி, உடலில் தடிப்புகள், பருக்கள்,வியர்க்குரு போன்றவை ஏற்படும்.

இயற்கையாக இதனை சரிசெய்ய பல பொருள்கள்,வழிகள் இருக்கின்றன. இயற்கை பொருட்களான தேன் மற்றும் தயிர் இரண்டும்வெயிலிலிருந்து சருமத்தைப் பாதுகாக்க பெரிதும் உதவுகிறது. அதேபோல் பாலாடையில் சிறிதளவு மஞ்சள் சேர்த்து முகத்திற்கு பூசி வந்தால் முகம் பளபளப்பை பெரும்.

ஒரு ஸ்பூன் தயிர், அரை ஸ்பூன் தேன் இரண்டையும் நன்றாகக் கலந்து முகத்தில் தடவவும். ஒரு 10 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான அல்லது குளிர்ந்த நீரால் கழுவவும்.

தேன் மற்றும் தயிர் இரண்டும் சருமத்தில் உள்ள ஈரப்பதத்தைத் தக்க வைக்கிறது. இதனைச் செய்யும்போது உங்கள் வறண்ட சருமம் பளிச்சென்று ஆகிவிடும். மேலும் முகத்தில் உள்ள கரும்புள்ளிகளையும், அழுக்குகளையும் மற்றும் இறந்த செல்களை நீக்கி பொலிவு பெறச் செய்கிறது.

முகத்தில் சுருக்கங்களை நீக்குவதால் இளமையைத் தக்கவைக்கும். இந்த கலவையை கழுத்து, கை உள்ளிட்ட இடங்களில் பருக்கள், கட்டிகள் இருக்கும் இடத்தில் தடவி வந்தால் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

வெயில் காலத்தில் சருமத்தில் நீர்த்தன்மை இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கோடைகாலத்தில் அதிக நீரை பருகுவது மிகவும் முக்கியமானது ஒன்றாகும்.





## ஒரேஞ் பழத்தில் உள்ள மருத்துவ பயன்கள் !!

ரத்த குழாய்களில் சேரும் கெட்ட கொழுப்பினை அகற்ற ஆரஞ்சு பழம் பயன்படுகிறது. மேலும் இதய பிரச்சனைகள் வராமல் தடுக்கிறது. ஜீரண சக்தியை அதிகப்படுத்தி உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நச்சுகளை வெளியேற்றுகிறது. ஒரேஞ் பழத்தில் உள்ள ஆண்டி ஆக்ஸிடன்ட் உடலில் புற்று நோயை உருவாக்கும் செல்களை அழித்து உடலை பாதுகாத்து புற்று நோய் வராமல் தடுக்கிறது.

உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் தினமும் காலை உணவு சாப்பிடும் முன் ஒரேஞ் பழத்தை ஜூஸாக குடித்து வருவது நல்லது. ஒரேஞ் பழத்தில் அதிக அளவு விட்டமின் சி உள்ளதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

தினமும் ஒரு பழம் சாப்பிடுவதால் பெண்களுக்கு 50% புற்றுநோய் ஏற்படும் அபாயம் குறையும். ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. ஆரஞ்சு பழத்தில் உள்ள பொட்டாசியம் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கும். உயர் இரத்த அழுத்த பாதிப்பு ஏற்படாமல் பாதுக்கிறது.

முடி கொட்டுவது குறைந்து முடியின் வளர்ச்சியை அதிபடுத்துகிறது. ஆண்களுக்கு விந்தணுக்களை அதிகரிக்கும் சக்தி ஒரேஞ் பழத்திற்கு உண்டு.

வாய் துர்நாற்றம் உள்ளவர்கள் ஒரேஞ் பழத்தை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். அதேபோல ஈறுகளில் வீக்கம், சொத்தை பல், வாய் கிருமிகளை கட்டுப்படுத்தும். தூக்கமின்மையால் அவதிப்படுபவர்கள் தூங்குவதற்கு முன் ஆரஞ்சு பழ சாறுடன் சிறிதளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நன்றாக தூக்கம் வரும்.

## பல நோய்களுக்கு எளிதாக நிவாரணம் தரும் முருங்கைக்காய் !!

முருங்கைக்காய்க்கு பல நோய்களை எளிதாக குணபடுத்தும் ஆற்றல் இருக்கிறது. அதை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால், உடலுக்கு ஆரோக்கியமும் உற்சாகம் கிடைக்கும்.

பித்தக்கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள், கண் தொடர்பான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர்கள் வாரத்திற்கு 3 நாட்கள் முருங்கைக்காய் பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் நோய் குணமாகும்.


இதயம், ரத்த ஓட்டம் மற்றும் நரம்பு மண்டலத்தை சிறப்பாக இயங்கவைக்கும், குறிப்பாக பிஞ்சு முருங்கைக்காயில் அதிக அளவில் சத்துக்களும் நன்மைகளும் உள்ளது.

முருங்கைப் பூவை சுத்தம் செய்து, அதே அளவு பாசிப்பருப்பு அல்லது துவரம் பருப்பு சேர்த்து கூட்டு செய்து சாதத்துடன் சாப்பிட்டு வந்தால் தேகத்திற்கு பலம் ஏற்படும்.

முருங்கைக்காயில் கல்ஷியம், பஸ்பரஸ், விட்டமின் சி போன்றவை போதிய அளவில் உள்ளன. 100 கிராம் முருங்கையில் 26 கலோரி இருக்கிறது.

முருங்கைக்காயின் சாற்றை எடுத்து, அதனை பாலில் கலந்து குடித்து வந்தால், குழந்தைகளுக்கு எலும்புகள் வலிமை பெறும். உடலில் இருக்கும் ரத்தத்தை சுத்திகரிப்பதற்காக, முருங்கைக்காயை நாம் அடிக்கடி சாப்பிட்டு வரலாம்.

இருமல், தொண்டை வலி, நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சனைகளுக்கு அடிக்கடி ஆளாகுபவர்கள், முருங்கைக்காயை சூப் செய்து பருகலாம். இவ்வாறு செய்தால், நல்ல தீர்வு கிடைக்கும்.



## கடலை மாவு அழகு குறிப்புகள்

**சருமம் மென்மையாக...**

சரும ஆரோக்கியத்திற்கும் அழகு தரக்கூடியவை. ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கடலை மாவை எடுத்துக்கொண்டு, ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். பின்னர் சிறிதளவு தண்ணீர் ஊற்றி கலந்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவி வந்தால் சருமம் மென்மையாகும்.

**எண்ணெய் பசை சருமம்**

சருமம் எண்ணெய் வழிந்து பிசு, பிசுப்பாக இருந்தால் அதற்கு கடலை மாவுடன் தயிர் சேர்த்து பேஷியல் போட்டால் முகம் அழகு பொலிவு பெரும். ஒரு கிண்ணத்தில் கடலை மாவை எடுத்து அதில் தயிர் , எலுமிச்சை சாறு ஊற்றி நன்றாக கலந்து முகத்தில் தடவ வேண்டும். சில நிமிடங்கள் ஊற வைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் எண்ணெய் பசை நீங்கி முகம் பொலிவு பெறும்.

**சோர்வான முகம்**

சிலருக்கு முகம் எப்போதும் சோர்ந்து வாடியபடி இருக்கும். அந்த முகம் பொலிவாக இருக்கவும் கடலை மாவு உதவும். தோலுடன் இருக்கும் அரை கிலோ கடலை பருப்பு, துளசி இலை 50 கிராம், வேப்பங்கொழுந்து 5 கிராம் இவற்றை நிழலில் உலர்த்தி, நன்றாக அரைத்து கொள்ள வேண்டும். கிண்ணத்தில் இரண்டு ஸ்பூன் அரைத்த பொடியை போட்டு அதில் இரண்டு துளி எலுமிச்சை சாறு சேர்த்து முகத்திற்கு பூசி ஐந்து நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவினால் முகம் பொலிவாக காணப்படும். சோர்வு தெரியாது. வாரம் ஒரு முறை செய்தால் பள.பளவென முகம் பிரகாசமாக இருக்கும்.

**உருளைக்கிழங்கு**

உருளைகிழங்கு சாறுடன் கடலை மாவையும் சேர்த்து முகத்தில் தேய்த்து வந்தாலும் முகம் பொலிவு பெறும். இது உங்களுக்கு பார்லர்களில் பேசியல் செய்தது போன்ற ஒரு அனுபவத்தை கொடுக்கும். ஆயிரக்கணக்கான பணத்தை பார்லர்களில் செலவிடுவதை விட இந்த முறையை செய்து பாருங்கள். நல்ல பலன் கிடைக்கும்.

**உருளைக்கிழங்கு**

பரு அதிகமா இருக்கா? சிலரது சருமத்தில் முகப்பருக்கள் அதிகம் இருக்கும். அத்தகைய முகப்பருக்களை போக்குவதற்கு பல பொருட்களைப் பயன்படுத்தி இருப்பார்கள். இருப்பினும் எந்த பலனும் கிடைத்திருக்காது. ஆனால் கடலை மாவில் சிறிது சந்தனப் பவுடர், மஞ்சள் தூள் மற்றும் பால் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவினால், நல்ல பலன் கிடைக்கும். அதிலும் இந்த முறையை வாரத்திற்கு மூன்று முறை செய்து வந்தால், நல்ல மாற்றம் தெரியும்.

## மொறுமொறு சுவையில் மசால் வடை

மசால் வடை, டீ டைமிற்கு உகந்த ஸ்னாக்ஸ். சிலருக்கு மசால் வடை சுட தெரிந்தாலும் மொறுமொறுவென சுடுவதில் சில ட்ரிக்ஸ் இருப்பது தெரிவதில்லை. அது எப்படி என தற்போது காணலாம்.

**தேவையான பொருட்கள் : கடலை பருப்பு - 1 கப், உப்பு - தே. அளவு, பட்டை - 1 இஞ்ச், காய்ந்த மிளகாய் - 2, சீரகம் - 3/4 வெளி,சோம்பு - 3/4 வெளி, வெங்காயம் - 1, புதினா - ஒரு கைப்பிடி, கறிவேப்பிலை - 1 ஸ்பிரிங், இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 1/4, பச்சை மிளகாய் - 1, மஞ்சள் - 1 சிட்டிகை**

**செய்முறை :**

கடலைப் பருப்பை 1 1/2 மணி நேரம் ஊற வைத்தால் போதும் அப்போதுதான் வடை மொறுமொறுவென வரும். ஊறியதும் தண்ணீரை வடித்துக்கொள்ளுங்கள்.

பட்டை, காய்ந்த மிளகாய், சீரகம் ஆகியவற்றை மிக்ஸி ஜாரில் போட்டு மைய அரைத்துக்கொள்ளுங்கள். அடுத்ததாக ஊறவைத்த கடலை பருப்பு உப்பு போட்டு ஒரு சுற்று சுற்றுங்கள்.

மாவு மைய இல்லாமல் மொறப்பாக அரைக்கவும். ஒரு சில கடலைப் பருப்புகள் அப்படியே இருக்க வேண்டும்.



தற்போது அரைத்த மாவை அகல பாத்திரத்தில் போடவும். அதில் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், புதினா,இஞ்சி பூண்டு பேஸ்ட் என அனைத்தையும் போட்டு பிசையுங்கள்.

கொஞ்சம் வாயில் வைத்து உப்பு சரியாக உள்ளதா என பார்த்துக்கொள்ளவும். தற்போது கடாயில் எண்ணெய் ஊற்றி நன்கு காய வையுங்கள்.

அடுத்ததாக உள்ளங்கையில் தண்ணீர் நனைத்து ,சிறிதளவு மாவை எடுத்து உள்ளங்கையில் வட்டமாகத் தட்டி அப்படியே லாவகமாக எண்ணெய் கடாயில் போடவும்.

இப்படி ஒவ்வொன்றாக போட்டு பொன்னிறமாக வறுத்து எடுக்கவும். அவ்வளவுதான் சுவையான மசால் வடை தயார்.

# மகளிர் பக்கம்

## பெண் குழந்தைகள் தந்தை மீது அதிக பாசம் வைக்க காரணம்

ஒரு தந்தை தனது ஆண் குழந்தைகளை கவனித்துக்கொள்வதை காட்டிலும், பெண் குழந்தையை அதிக அக்கறை எடுத்து கவனித்து கொள்வதற்கான காரணத்தை பார்க்கலாம்.

**பெண் குழந்தைகள் தந்தை மீது அதிக பாசம் வைக்க காரணம்**

தந்தை என்றால் பெண் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். அதே போல தான் ஒரு தந்தை தனது ஆண் குழந்தைகளை கவனித்துக்கொள்வதை காட்டிலும், பெண் குழந்தையை அதிக அக்கறை எடுத்து கவனித்துக்கொள்ள வேண்டும். அது ஏன் என்று தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

தனது தந்தையின் மீது தான் பெண் குழந்தை அதிக ஆர்வம் காட்டுவதாகவும், மனம்விட்டு பேச வேண்டும், தனது உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும், சோகங்களை பகிர வேண்டும் என்ற எண்ணம் தாயை விட தந்தையிடம் இடம் தான் அதிகமாக இருக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. எனவே ஆண்கள் தனது குழந்தையின் மனநிலையை புரிந்து நடந்துகொள்ள வேண்டும்.

ஒரு தந்தையால் ஆண் குழந்தைகளின் உள் உணர்வுளை புரிந்து கொள்வதை விட பெண் குழந்தைகளின் உள் உணர்வுகளை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது. எனவே தனது குழந்தைக்கு வேண்டியதை செய்ய இவர்களால் முடியும்

என்ன தான் பெண் குழந்தைகள் தன் தாயுடன் நாள் முழுவதையும் கழித்தாலும் கூட, தன் தந்தையை கண்டவுடன் தந்தையிடம் ஒட்டிக்கொள்ளும். பெண் குழந்தைகளுக்கு தன் தந்தையுடன் நேரத்தை செலவழிப்பது மற்றும் விளையாடுவது என்றால் மிகவும் பிடிக்குமாம்.

பெண் குழந்தைகளால் மற்றவர்களை காட்டிலும், தனது முகபாவனைகள் மற்றும் பேச்சு ஆகியவற்றை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது.

தாயை காட்டிலும் தந்தையால் தனது பெண் குழந்தைக்கு அதிக வெளியுலக அறிவை கொடுக்க முடியும். தந்தையுடன் செலவிடும் நேரங்களில் பெண் குழந்தைகள் அதிகமாக கற்றுக்கொள்ள முடிகிறது.

பெரும்பான்மையான குழந்தைகள் தங்களது தந்தையின் செல்லப்பிள்ளைகளாக இருப்பார்கள். தாயுடனான தந்தையின் அன்பு ஒரு குழந்தையின் மனநலம் மற்றும் உடல்நலத்தை பேணிக்காக்கிறது.

## தூக்கமின்மையால் பெண்களுக்கு வரும் நோய்கள

பெண்களுக்கு ஆண்களைவிட அதிகத் தூக்கம் தேவை. ஆனால், உண்மையில் அவசியமான அளவு தூக்கம்கூட அவர்களுக்குச் சாத்தியப்படுவதில்லை என்றும், தொடர் தூக்கமின்மையால் பாதிக்கப்படுகிற பெண்களை டைப் 2 நீரிழிவு, இதய நோய்கள், மன அழுத்தம் போன்ற பிரச்சனைகள் தாக்கும் வாய்ப்புகள் அதிகம் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் தூக்கம் என்பது கனவுதான். இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில், பெண்களுக்கு ஏற்படும் தூக்கமின்மை குறித்தும், அதனால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் பார்க்கலாம்.

### தொடர் தூக்கமின்மையால் பாதிக்கப்படுகிற பெண்களை டைப் 2 நீரிழிவு, இதய நோய்கள், மன அழுத்தம் போன்ற பிரச்சனைகள் தாக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது.



இப்போது மட்டுமல்ல பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெண்கள் தூங்கும் நேரம் என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. கணவன் வரும் வரை சாப்பிடாமலும், தூங்காமலும் இருப்பது போன்ற வழக்கங்களால், பெண்கள் தாங்களாகவே தூங்கும் நேரத்தைக் குறைத்துவிட்டார்கள். 70 சதவிகித பெண்கள் தங்களுக்குத் தூக்கமின்மை பிரச்சனை இருப்பதையே அறியாமல் இருப்பதுதான் வேதனை. இன்றைய காலகட்டத்திலோ, பெண்கள் நினைத்தால்கூட தூங்குவதற்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை. கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்லும் சூழலில், காலை முதல் இரவு வரை பெண்களுக்கு வேலை ஓய்வதில்லை. என்னதான் கணவர் வீட்டுவேலைகளைப் பகிர்ந்துகொண்டாலும், பெண்களுக்குத்தான் கூடுதல் வேலைகள் இருக்கும் என்பது மறுக்கமுடியாத நிஜம். வேலைகளை முடித்துவிட்டுத் தாமதமாகச் சாப்பிடுவதும், உடனே படுத்துவிடுவதும்கூட உடலுக்கு நாம் இழைக்கும் தீங்குதான்.

இரவு நேரப் பணி என்பதும் நம் உடலுக்கு ஒவ்வாத விஷயமே. பகலில் உழைப்பதும், இரவில் உறங்குவதுமே இயற்கையின் நியதி. இந்தச் சக்கரத்தை மாற்றி, பகலில் உறங்கி, இரவில் வேலை செய்வதை நம் மனமும் உடலும் ஏற்றுக்கொள்ளாது. மேலும், நம்மைத் தூங்க வைக்கும் 'மெலட்டோனின்' என்கிற ஹார்மோன் இரவில் அதிகம் சுரக்கும். பகலில் நாம் சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கான காரணம், இது குறைவாக சுரப்பதுதான்! இந்தச் செயல்பாட்டைத் தலைகீழாக மாற்றும்போது, உடல்நலமும் பாதிப்படையும். குறிப்பாக பெண்களுக்குத் தூக்கம் குறையும்போது, அவர்கள் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படுவார்கள். சரியான தூக்கம் கிடைக்காத பெண்கள் காரணமில்லாமல் எரிச்சல் அடைவார்கள். அதன் தொடர்ச்சியாக கோபம், மனச்சோர்வு, நாள் முழுவதும் மந்தமாக உணர்வது, சிறிய பிரச்சனையைக்கூட பெரியதாக நினைத்து கவலைப்படுவது என மனரீதியான சிக்கலுக்கு ஆளாவார்கள். தூக்கமின்மை காரணமாக ஆரம்ப காலகட்டத்தில் கண் எரிச்சல், தலைவலி, மைக்ரேன் எனப்படும் தீராத தலைவலி போன்ற பிரச்சனைகளால் அவதிப்படுவார்கள். இவை தொடர்ந்து நீடிக்கும்பட்சத்தில் மாதவிடாய் குழப்பங்கள் உண்டாகும். குழந்தையின்மை போன்ற பெரிய பிரச்சனைகளுக்கு ஆரம்பமாக அமைந்துவிடும். கண்டுகொள்ளாமல் விட்டாலோ, சில ஆண்டுகளிலேயே ரத்த அழுத்தம், இதயநோய், பக்கவாதம், நீரிழிவு வரை கொண்டு சென்று விடும். ஆண்களுக்கு



தூக்கம் வரவில்லை என்றால் உடனே மருத்துவரை அணுகுகிறார்கள். பெண்களோ, 'இதெல்லாம் ஒரு விஷயமா' என்று சர்வசாதாரணமாகக் கடந்துவிடுகிறார்கள். 'நான் ஆறு மாசமா தலைவலியால அவதிப்படுறேன். அதுக்கு டேப்லெட் எடுத்துகிறேன் டாக்டர்' என்பவர்களை ஆராய்ந்தால், தூக்கம்தான் பெரும் பிரச்சனையாக இருக்கும். தூக்கமின்மை என்பது, நம் உடல்நலனில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் உடனடியாக மருத்துவரை அணுகுவதே சிறந்த வழி.

## குழந்தைகளின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை வேண்டாம்

குழந்தைகள் தங்களுக்குள் எழும் சந்தேகங்களை போக்குவதற்கு பெற்றோரை நாட தயங்குவார்கள். கண்டிப்பு குறைவான, கனிவுமிக்க நடத்தையே குழந்தைகளை சுதந்திரமாக செயல்பட வைக்கும். குழந்தைகளின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை வேண்டாமே... குழந்தைகளின் செயல்பாடுகள் பெற்றோரைப் போன்றே இருக்காது. அதனால் பெற்றோர் அவர்களுடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் குழந்தைகள் மீது திணிக்கக் கூடாது. குழந்தைகளை சுயமாக சிந்திக்க விடுங்கள். சுதந்திரமாக செயல்பட விடுங்கள். அப்பொழுதுதான் அவர்களிடம் இருக்கும் தனித்திறமைகளை வெளிக்கொண்டு வர முடியும். அவர்களுடைய செயல்பாடுகளை ஊக்குவியுங்கள். அவை தவறானதாக இருந்தாலும் அவர்களின் போக்கிலேயே சென்று நன்மை, தீமைகளை பக்குவமாக விளக்கி புரிய வையுங்கள். அதைவிடுத்து உங்களுடைய கருத்துக்களை அவர்களின் மீது திணித்து அவர்களுடைய ஆர்வத்துக்கு

**குழந்தைகளின் செயல்பாடுகள் பெற்றோரைப் போன்றே இருக்காது. அதனால் பெற்றோர் அவர்களுடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் குழந்தைகள் மீது திணிக்கக் கூடாது. குழந்தைகளை சுயமாக சிந்திக்க விடுங்கள். சுதந்திரமாக செயல்பட விடுங்கள். அப்பொழுதுதான் அவர்களிடம் இருக்கும் தனித்திறமைகளை வெளிக்கொண்டு வர முடியும்.**

முட்டுக்கட்டை போட்டு விடாதீர்கள். அவர்கள் குழப்பமான மனநிலையில் இருக்கும் சமயங்களில் பெற்றோரின் அறிவுரைகள் அவர்களுடைய சந்தேகங்களை தெளிவடைய செய்யும் விதத்தில் இருக்க வேண்டும். பள்ளி நாட்கள் தவிர மற்ற நாட்களிலும் அதிகாலையில் தூங்கி எழும் பழக்க வழக்கத்தை பின்தொடர செய்யுங்கள். அது சோம்பல் தனத்தை போக்கி எப்பொழுதும் சுறுசுறுப்பாக அவர்களை செயல்பட வைக்கும். கண்டிப்பும், கட்டளையும் குழந்தை வளர்ப்புக்கு கைகொடுக்காது. அதிக கண்டிப்புடன் வளர்க்கப்படும் குழந்தைகள் தங்களுக்குள் எழும் சந்தேகங்களை போக்குவதற்கு பெற்றோரை நாட தயங்குவார்கள். கண்டிப்பு குறைவான, கனிவுமிக்க நடத்தையே குழந்தைகளை சுதந்திரமாக செயல்பட வைக்கும். அவர்களிடையே எழும் கேள்விகளுக்கு பொறுமையுடன் பதில் சொல்லும் மனநிலையில் பெற்றோர்கள் இருக்க வேண்டும். சரியான ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்குவதன் மூலம் குழந்தைகளின் அறிவுத்திறன் மேம்படும். பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயான உறவில் ஒருபோதும் இடைவெளி ஏற்படக்கூடாது. அப்போதுதான் தயக்கமின்றி மனம் விட்டு பேசுவார்கள். தவறான பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கவும் மாட்டார்கள். வீட்டில் பெற்றோரிடம் இருந்து கற்றுக்கொள்ளும் அனுபவ பாடங்கள்தான் குழந்தைகளின் பழக்க வழக்கங்களையும், நன்னடத்தையையும் தீர்மானிக்கும். அமைதி, அரவணைப்பு, விட்டுக்கொடுத்தல், குழுவாக இணைந்து பணியாற்றுதல், கலந்துரையாடல் போன்ற அனைத்து விஷயங்களையும் வீட்டில் இருப்பவர்களிடம் இருந்து தான் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. அவை அவர்களின் வாழ்க்கையை செம்மைப்படுத்துவதற்கு வழிகாட்டும். எனவே பெற்றோர்கள் குழந்தைகள் வளர்ப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.



## பெண்கள் தூக்கத்தில் பற்களை கடிப்பது ஏன்?

பலருக்கும் அதிலும் குறிப்பாக இளவயது பெண்களுக்கு தூக்கத்தில் நறநறவென பற்களைக் கடிக்கும் பழக்கம் இருக்கிறது. இது பல நேரங்களில் அருகில் படுத்திருப்பவர்களின் தூக்கத்தைக் கெடுத்து விடும். இப்படி பற்களைக் கடிப்பவர்களுக்கு அப்படி அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்ற உணர்வே தோன்றுவதில்லை.

தூக்கத்தில் பற்களைக் கடிப்பதை மருத்துவ உலகு 'ப்ருக்ஸிஸம்' என்கிறது. இது மன அழுத்தத்துக்கான வடிகால் இல்லாமல் போகும்போதுதான் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது என்கிறார்கள், மருத்துவர்கள். வெறுப்பு, கோபம், இயலாமை, ஏமாற்றம் என்று பல்வேறான மன அழுத்தங்களுக்கு தீர்வு காணாமல், மனதுக்குள்ளேயே போட்டு புதைத்துக்கொண்டால், அவை தூக்கத்தின் போது இப்படி வெளிப்படும் என்கிறார்கள் உளவியலாளர்கள்.

பொதுவாக டீன்ஏஜ் பருவத்தில் இருப்பவர்கள்தான் இந்தப் பிரச்சினையில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களின் மன அழுத்தத்திற்கு தேர்வு பயம் முக்கிய காரணமாக இருக்கிறது. அதற்கடுத்து காதல் விவகாரமும் சேர்ந்து கொள்கிறது. பிரச்சினை என்னவென்று தெரிந்துகொண்டால் தீர்ப்பதும் சுலபம். பற்கள் தொடர்ந்து இப்படி நறநறவென்று அரைபடுவதால் நாளடைவில் கீழ்த்தாடையின் முன்பற்கள் தேய்ந்து, கூச ஆரம்பித்துவிடும். எந்தவொரு இனிப்பான உணவையும், சூடான அல்லது குளிர்ச்சியான பானங்களையும் சாப்பிட முடியாது. வெகுநாட்கள் இந்த பிரச்சினை தொடர்ந்தால் தாடையின் சதைகள் இறுகி முகத்தின் அமைப்பே குலைந்து போய்விடும். தாடை எலும்பை மண்டை ஓட்டோடு இணைந்திருக்கும் மூட்டுப் பகுதியும் பாதிக்கப்பட்டு வலி உண்டாக்கும்.

தூக்கத்தில் பற்களைக் கடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் தற்காலிக தீர்வாக 'சாப்ட் ஸ்ப்லின்ட்' என்ற கிளிப்பை பயன்படுத்தலாம். படுக்கப்போகும்போது மட்டும் இதை பற்களில் பொருத்திக்கொள்ளலாம். இதன் மூலம் பற்களின் கீழ் தாடையும் மேல் தாடையும் ஒட்டாமல், உரசாமல் தடுக்கலாம். ஆனாலும் இது நிரந்தரமான தீர்வு அல்ல.

மன அழுத்தத்துக்கான காரணத்தை தேடி, அதைச் சரி செய்த பிறகே இந்தப் பிரச்சினையில் இருந்து முழுமையாக வெளிவர முடியும். இதற்கு நல்ல மனநல ஆலோசகரின் அறிவுரை, யோகா, தியானம் போன்ற ஆன்மிக வழிமுறைகளை நாடலாம். நல்ல பயன் தரும். நிச்சய தீர்வு கிடைக்கும்.



# விளையாட்டு செய்திகள்



## உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா!

மேற்கிந்தியத் தீவுகள் அணியை 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மகளிர் உலகக் கிண்ண இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது அவுஸ்திரேலிய அணி.



வெலிங்டனில் நடைபெற்ற முதல் அரையிறுதிச் சுற்றில் அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 45 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 305 ஓட்டங்கள் குவித்தது.

மழை காரணமாக ஆட்டம் 45 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. ஆஸி. தொடக்க வீராங்கனைகள் ரேச்சர் ஹெய்ன்ஸ/ம் அலிஸா ஹீலியும் முதல் விக்கெட்டுக்கு 32.4 ஓவர்களில் 216 ஓட்டங்கள் குவித்தார்கள். அலிஸா ஹீலி 107 பந்துகளில் 1 சிக்ஸர். 17 பவுண்டரிகளுடன் 129 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இது அவருடைய 4-வது ஒருநாள் சதமாகும்.

ஆஸி. அணி நிர்ணயித்த இலக்கை விரட்ட மே.இ. தீவுகள் அணி மிகவும் தடுமாறியது. 37 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. தலைவர் ஸ்ட.்பானி டெய்லர் 48 ஓட்டங்களும் டாட்டின் 34 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

மே.இ. தீவுகள் அணியை 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது அவுஸ்திரேலிய அணி. உலகக் கிண்ண போட்டியில் 7 வது முறையாக இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

## மியாமி பகிரங்க டென்னிஸ்: காஸ்பர் ரூட்- இகா ஸ்விடெக் அரையிறுதிக்கு தகுதி! அரசியலில் களம் இறங்கும் கிரிக்கெட் வீரர்!



மியாமி பகிரங்க டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டிகளில், நோர்வேயின் காஸ்பர் ரூட் மற்றும் போலந்தின் இகா ஸ்விடெக் ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர். ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், நோர்வேயின் காஸ்பர் ரூட், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், காஸ்பர் ரூட், 6-3, 1-6, 6-3 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், போலந்தின் இகா ஸ்விடெக்கும் செக். குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவும் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், இகா ஸ்விடெக், 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்ற அரையிறுதிக்குள் நுழைந்தார்.

### 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் வெளிநாட்டு வீரர்களும் பங்கேற்பு

தியகமவில் நடைபெறவுள்ள 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்க தெற்காசிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகள் சிலவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது. இதன்படி, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 100வது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் குறித்து ஊடகங்களை தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் சந்திப்பு (29) கொழும்பு சிஆர்ரூஎப்சி வளாகத்தில் இடம்பெற்றது. இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி பிரேமா பின்னவல, உப தலைவர் ஜி.எல்.எஸ் பெரேரா, SLT MOBITEL இன் கொழும்பு பிராந்திய தலைவர் டேனம் பெரேரா மற்றும் விளம்பர முகாமையாளர் கெனும் குலதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிலையில், இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் மற்றும் அடுத்த மாதம் தியகமவில் நடைபெறவுள்ள 100ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் குறித்து மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்.

"100 ஆண்டுகளைக் கடப்பது என்பது எந்தவொரு நிறுவனத்திற்கும். எந்தவொரு மனிதனுக்கும் எளிதான விடயம் அல்ல. ஒரு விளையாட்டு சங்கமாக ஆசியாவிலேயே 100 ஆண்டுகளை நிறைவு செய்த மூன்றாவது நாடு நாங்கள் தான். ஜப்பானும், கொரியாவும் மட்டுமே எங்களுக்கு முன்னால் உள்ளன. உலக மெய்வல்லுநர் சங்கத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்ட நாடுகள் வரிசையில் நாங்கள் 40ஆவது இடத்தில் இருக்கிறோம். அதேபோல, உலக மெய்வல்லுநர் சங்கத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்ட முதல் தெற்காசிய நாடும் இலங்கை தான். எமது நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரை ஏப்ரல் 08, 09 மற்றும் 10ஆம் ஆகிய திகதிகளில் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் விழா, பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர்களுக்கு எமது வீரர்களை தேர்ந்தெடுப்பதற்கான போட்டித் தொடராக இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் அமையவுள்ளது. 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்க தெற்காசிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு நாங்கள் அழைப்பு விடுத்துள்ளோம்" என அவர் தெரிவித்தார்.




இதன்படி, இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கிறோம் என அவர் குறிப்பிட்டார். முன்னதாக, 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், சுகததாச மைதானத்தின் புனரமைப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் தியகம மைதானத்திற்கு தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரை மாற்றுவதற்கு இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தின் சுவட்டு பாதை புனரமைக்கப்பட்டதன் பின்னர் நடைபெறும் இரண்டாவது மெய்வல்லுநர் தொடர் இதுவாகும்.

இதேவேளை, இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்க இதுவரை 520 உள்ளூர் வீரர்களும், 20 வெளிநாட்டு வீரர்களும் தங்களது பெயர்களை பதிவுசெய்துள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது. இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட கருத்தரங்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் ஏப்ரல் 07ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் 400 பேரின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ள இந்த கருத்தரங்கில் ஒலிம்பிக்கில் பங்குகொண்ட மெய்வல்லுநர்கள், முன்னாள் மற்றும் இன்னாள் மெய்வல்லுநர்களும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேபோல, குறித்த நிகழ்வு இடம்பெறுகின்ற மாலை தெற்காசிய மெய்வல்லுநர் சங்கத்தின் விசேட அமர்வும் இடம்பெறவுள்ளது.

## அரசாங்க தகவல் திணைக்கள மென்பந்து கிரிக்கெட் போட்டி




அரசாங்க தகவல் திணைக்களத்தில் சேவை புரியும் பணியாளர்களுக்கு இடையில் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுபவது குறிப்பிடத்தக்கது. கடந்த 26ஆம் திகதி பெல்ஹேன்கொட மகாமாத்ய வித்தியாலய மைதானத்தில் பீப்பல் லீசிங் அனுசரணையில் இடம்பெற்ற இந்த போட்டியில் ஆண்கள் பிரிவில் பப்லிசிட்டி லயன்ஸ் அணி சம்பியனாக தெரிவான அதேவேளை மகளிர் பிரிவில் இன்போ பைட்டர்ஸ் அணி சம்பியனாக தெரிவானது.

### பாகிஸ்தான் செல்லும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி எதிர்வரும் மே மற்றும் ஜுன் மாதங்களில் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி 20 போட்டிகளில் விளையாடவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



இதன்மூலம் பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணியானது முதன்முறையாக ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப் தொடருக்கான போட்டிகளை தங்களுடைய சொந்த மண்ணில் நடத்தவுள்ளது.

ஒருநாள் மற்றும் ரி 20 தொடர்கள் மே 18ம் திகதி முதல் ஜுன் 7ம் திகதிவரை ராவல்பிண்டி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் மூன்று ஒருநாள் போட்டிகள் ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப் தொடருக்கான போட்டிகளாக அமையவுள்ளன.

பாகிஸ்தான் மகளிர் மற்றும் இலங்கை மகளிருக்கு இடையிலான இந்த தொடர் கடந்த வருடம் நடைபெறவிருந்த போதும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அதேநேரம் இந்த தொடரானது பேர்மிங்கமில் நடைபெறவுள்ள (ஜுலை, ஆகஸ்ட்) பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழா (செப்டம்பர்) ஆகியவற்றுக்கு தகுதிபெறுவதற்கான முக்கிய தொடராக அமையவுள்ளது.

கடந்த 1998ம் ஆண்டுக்கு பின்னர் இலங்கை மகளிர் மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகள் பல தடவைகள் இருதரப்பு தொடர்களில் விளையாடியிருந்தாலும், முதன்முறையாக இலங்கை மகளிர் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



# உலக பார்வை



## ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இந்தியா விஜயம்

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லெவ்ரோவ் (Sergey Lavrov) இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார். இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அவர் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கச்சாய் எண்ணெய், ரூபாய் - ரூபிள் கொடுக்கல் வாங்கல் மற்றும் ஆயுத உடன்படிக்கைகள் நிகழ்ச்சி நிரலில் உள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் ஆழ்ந்த அதிருப்தியடைந்துள்ளதாக அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தியாவை விமர்சித்துள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் ரஷ்யாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடைகளை குறைத்து மதிப்பிடும் ரஷ்யாவின் முன்மொழிவை இந்தியா கருத்தில் கொண்டுள்ளதாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. விளாடிமிர் புட்டினின் யுத்தத்திற்கு உதவி புரிவதை தவிர்த்து சரியான நிலைப்பாட்டை எடுப்பதற்கான சந்தர்ப்பம் இதுவெனவும் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் இறைமையுடன் உக்ரைனிய மக்களுடன் நிற்பதற்கான காலம் இதுவெனவும் அமெரிக்க வர்த்தக அமைச்சர் கினா ரெய்மொன்டோ தெரிவித்துள்ளார்.





## கொங்கோவில் ஹெலிகொப்டர் விபத்து 8 பேர் பலி

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையினர் சென்ற ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது.

கொங்கோ நாட்டின் கிழக்குப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இந்த விபத்தில் 8 அமைதி காக்கும் படையினர் கொல்லப்பட்டதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## 2021ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் 1.3 சதவீத பொருளாதார வளர்ச்சி!

கடந்த 2021ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில், பிரித்தானிய பொருளாதாரம் 1.3 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையே மொத்த உள்நாட்டு உற்பத்தி1.0 சதவீத வளர்ச்சியடைந்ததாக தேசிய புள்ளியியல் அலுவலகம் மதிப்பிட்டிருந்தது. இதுதொடர்பாக தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் பொருளாதார புள்ளிவிபர இயக்குனர் டேரன் மோர்கன் கூறுகையில், 'நான்காவது காலாண்டில் நாங்கள் முதலில் நினைத்ததை விட மொத்த உள்நாட்டு உற்பத்தி சற்று வலுவாக வளர்ந்தது. அதாவது இப்போது அதன் தொற்றுநோய்க்கு முந்தைய மட்டத்திற்கு கீழே 0.1 சதவீதம் மட்டுமே உள்ளது' என கூறினார். பிரித்தானிய பொருளாதாரம் கடந்த ஆண்டு 7.4 சதவீதம் வளர்ச்சியடைந்தது. சமீபத்திய தேசிய புள்ளியியல் அலுவலக மதிப்பீடுகளின்படி, அழிவுகரமான 2020ஆம் ஆண்டிலிருந்து ஒரு சாதனை மீள் எழுச்சியில், 7.5 சதவீத ஆரம் மதிப்பீட்டைத் தவறவிட்டது. பிரித்தானியாவில் வாழ்க்கைச் செலவு நெருக்கடிக்கு மத்தியில் இந்தச் செய்தி வந்துள்ளது.

## நம்பிக்கையில்லா பிரேரணையை மீள பெற்றால் பாராளுமன்றம் கலைக்கப்படும்: இம்ரான் கான் தெரிவிப்பு

தனக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீள பெறப்படுமாயின், பாராளுமன்றத்தை கலைப்பதற்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முன்வந்துள்ளார். நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்திற்கான தேசிய சட்டமன்ற கூட்டத்தொடருக்கு முன்னதாக நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

தமது அரசைக் கவிழ்ப்பதில் வெளிநாட்டு சதி இருப்பதாக இம்ரான் கான் குற்றம் சாட்டியுள்ளார். பாகிஸ்தான் பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் ஆரம்பமானது.

நம்பிக்கையில்லா தீர்மானம் மீது ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி பாராளுமன்ற கீழவையில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே, இம்ரான் கானின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக பாகிஸ்தான் தெஹ்ரீக்- இ- இன்சாப் கட்சியின் சிரேஷ்ட தலைவர் Faisal Vawda கூறியுள்ளார்.

பிரதமர் இம்ரான் கானை கொல்ல திட்டம் தீட்டப்பட்டதாக அவர் பாகிஸ்தான் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இதனால் மக்கள் மத்தியில் செல்லும் போது, குண்டு துளைக்காத அங்கியை அணியுமாறு பிரதமருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கடன்கள் காரணமாக சீனாவின் புதியபட்டுப்பாதை திட்டம் ஒரு சிக்கலான விவகாரமாக மாறுகின்றது- நிபுணர்கள்

2020 முதல் நேபாள சீனா எல்லை மூடப்பட்டுள்ளமை சீனாவுடனான நேபாளத்தின் வர்த்தகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள நிபுணர்கள் -இருநாடுகளினதும் புவிசார் அரசியல் மற்றும் மூலோபாய நலன்கள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வியாழன் அன்று காத்மாண்டுவில் BRI மற்றும் நேபாள சீன உறவுகள் குறித்த சமூக உள்ளடக்கம் மற்றும் கூட்டாட்சி மையம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில்நிபுணர்கள் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளனர். சீனா நேபாள உறவுகள் நட்புறவை அடிப்படையாக கொண்டவையா அல்லது இரு நாடுகளும் வெறுமனே வணிக பங்குதாரர்களா என நிபுணர்கள் கேள்விஎழுப்பினார்கள் என ஹபர் ஹப் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த கருத்தரங்கில் இராஜதந்திரிகள் பத்திரிகையாளர்கள் அதிகாரிகள் உட்பட 80 க்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர் என ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யின் விஜயம் இடம்பெறவிருந்த வேளையிலேயே இந்த கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது. இந்த கருத்தரங்கில் மூன்று முக்கிய கருப்பொருள்கள் குறித்து மூன்று குழுக்கள் விவாதித்தன. பிஆர்ஐயும் புவிசார் அரசியலும் (புதிய பட்டுப்பாதை திட்டம்)வாய்ப்புகளும் சவால்களும் நேபாளம் சீனா எல்லை கடந்த உறவுகள் நேபாளம் சீனா வர்த்தகம் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. குறிப்பிட்ட கருப்பொருட்கள் குறித்து ஆகியோர் தங்கள் முடிவுகளை சமர்ப்பித்தனர்.

முதல் குழு நேபாளத்தில் பெரும் அதிகாரப் போட்டியின் தாக்கங்களை வலியுறுத்தியது மற்றும் சீன வெளியுறவு மந்திரி வாங் யியின் வருகையை அதேஅடிப்படையில் மூலம் பார்த்தது. மேலும் கபார் ஹப் படி வாஷிங்டன் மற்றும் பெய்ஜிங்கால் நடைமுறைப்படுத்தப்படும் இராஜதந்திரத்தின் மாறுபட்ட மாதிரிகள் மற்றும் MCC மற்றும் BRI தொடர்பாக ஒருவரையொருவர் வெறுப்பது குறித்து குழு விவாதித்தது. சீனாவின் வெளியுறவு மந்திரி வாங் தனது நேபாள பிரதமர் டாக்டர் நாராயண் கட்காவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது மேலும் ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி பிரதமர் ஷேர் பகதூர் டியூபா முன்னாள் பிரதமர்கள் மற்றும் முக்கிய தலைவர்கள் கேபி சர்மா ஒலி மற்றும் புஷ்பா உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைவர்களுடன் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேபாளத்தில் சீனாவின் முதலீடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து நேபாள மக்கள் மத்தியில் அதிருப்தியும் சந்தேகமும் அதிகரித்து வருவதை நேபாளம் எதிர்கொண்டுள்ளது.

நேபாளத்தின் கிழக்கில் உள்ள ஜபா மாவட்டத்தில் சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டங்களிற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. நேபாளத்தில் சீனா இனிமேல் பாதுகாப்பாக இருக்க முடியாது என உணர்வதால் சீனாவின் புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு சவால்களை மறுமதிப்பீடு செய்வதே சீன வெளிவிவகார அமைச்சரின் நேபாள விஜயத்தின் முக்கிய நோக்கம் என சீன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நேபாளத்தில் புதிய பட்டுப்பாதை திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சீனாவின் புதியபட்டுப்பாதை திட்டத்திற்கு மிகவும் அவசியமானது என தெரிவித்துள்ள காத்மண்டுவை தளமாக கொண்டுள்ள சீன அதிகாரியொருவர் இம்முறை சீனா உருவாகிவரும் பாதுகாப்பு சவால்கள் குறித்து அதிக கவலை கொண்டுள்ளது என தெரிவிக்கின்றார்.

## இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகளை வழங்க வேண்டுமென இந்திய பிரதமர் மோடியிடம் தமிழ்நாடு முதலமைச்சர் கோரிக்கை!

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகளை வழங்க இந்திய மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார். இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலக அறையில் பிரதமர் நரேந்திர மோடி- மு.க.ஸ்டாலின் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே தமிழக முதல்வர் இந்த கோரிக்கையை முன்வைத்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.இலங்கை தமிழர் பிரச்சினை-ஈழத் தமிழர்களுக்கு சம உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள்

ஆ) இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக அல்லலுறும் இலங்கை தமிழர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை தமிழக அரசின் சார்பில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக. தமிழக முதல்வர் இந்திய பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.
பாக் வளைகுடாவில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல். ஆ) "கச்சத்தீவு" மீட்பது மற்றும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது தொடர்பாக.தமிழக முதல்வர் இந்திய பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்

## ரஷிய வீரர்கள் சொந்த நாட்டு போர் விமானங்களையே சுட்டு வீழ்த்துகின்றனர் - இங்கிலாந்து உளவுத்துறை

ரஷிய வீரர்கள் சொந்த நாட்டு போர் விமானங்களையே சுட்டு வீழ்த்துவதாக இங்கிலாந்து உளவுத்துறை தலைவர் தெரிவித்துள்ளார். உக்ரைன் மீது ரஷியா 36-வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வர பல நாடுகள் முயற்சித்த போதும் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்து வருகின்றன. உக்ரைன் தலைநகர் கீவ், மரியபோல், கார்கீவ், கார்சன் உள்பட பல்வேறு நகரங்களில் ரஷிய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

ரஷிய படைகளின் தாக்குதலுக்கு உக்ரைன் ராணுவமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது. மேலும், ரஷியாவின் கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளை உக்ரைன் படைகள் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளன. இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுத உதவி வழங்கி வருகின்றன. ரஷிய வீரர்கள் சொந்த நாட்டு போர் விமானங்களையே சுட்டு வீழ்த்துவதாக இங்கிலாந்து உளவுத்துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இங்கிலாந்து உளவுத்துறை தலைவர் ஜெர்மி பிளமிங் கூறுகையில், உக்ரைன் மக்களின் எதிர்ப்பை ரஷிய அதிபர் புதின் தவறாக கணித்துவிட்டார். போரால் விதிக்கப்படும் பொருளாதார தடைகளின் விளைவுகளை அவர் குறைத்து மதிப்பிட்டுவிட்டார். மேலும், தனது ராணுவத்தின் திறனை உயர்த்தி மதிப்பிட்டு உக்ரைன் போரில் விரைவில் வெற்றிபெற்றுவிடுவோம் என அவர் கணித்துள்ளார்.மன வலிமையின்றி, போதிய ஆயுதங்கள் இன்று உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு கீழ்படியாமல் ரஷிய வீரர்கள் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ரஷிய வீரர்கள் தங்கள் சொந்த ஆயுதங்களையே அழிக்கின்றனர். அதுமட்டுமின்றி ரஷிய வீரர்கள் தவறுதலாக தங்கள் சொந்த போர் விமானங்களையே சுட்டு வீழ்த்துகின்றனர். அதேவேளை, உக்ரைன் மீதான போரை தவறாக கணித்துவிட்டோம் என்பதையும், அதன் தற்போதைய நிலையையும் ர ஷிய அதிபர் புதினின் ஆலோசகர்கள் அவரிடம் (புதினிடம்) தெரிவிக்க பயப்படுகின்றனர்' என்றார்.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 03.04.2022 அன்று வெளியிடப்பட்டது.